தென்மொழி

31

வீரனின் காதல்!

'அன்று பார்த்த விழிகளுக் குள்ளேயே
அடைபட் டிருந்(து),என் உயிர்,உளம்
ஆள்கிறீர்!
என்று பார்ப்ப(து) இனி'—என, எனக்கு,நீ
எழுதியே யிருக்கின் றாய்,இளம் மங்கையே!
'நின்று பார்த்த பெண்களுக் குள்ளேயே
நீதான் முழுதெனைக் கவர்ந்தவள்' என்னினும்
வென்று முடித்துத் 'தமிழ்நிலம்' மீட்டபின்
வெற்றி முத்தத்தை வாங்கிட வருவனே!

'பார்த்துச் சென்றபின் நெஞ்சமும் உயிரும்
பறந்து,உம் பின்னேயே வந்ததைப் பார்த்தீரா?
வேர்த்துக் கிடக்கிறேன்; என்று வருவீர்'—என
வினவி இருக்கிறாய், என்னுயிர்த் தங்கமே!
ஈர்த்துக் கொண்டனை நீயும் என் உளத்தையும்!
இங்கு நான் மட்டுமே இருக்கின் றேன்,அடி!
ஆர்த்துக் கொண்டுளேன்! மொழி,இனம், நாட்டினை
அடைந்தபின் வருகிறேன்: அதுவரை
பொறுத்திரு!

'செத்துக் கொண்டுளேன்; பிணமாகிப் போகுமுன்
சிரித்த, உம் முகத்தினைக் காணவே துடிக்கிறேன்;
ஒத்துக் கொண்டு,நீர் உடனே வருகுவீர்!
உயிரைக் காத்திடுவீர்'—என எழுதினாய்!
முத்தமிழ், இனம்,நா(டு) உரிமை மூன்றையும்
முழுவதும் மீட்டிடப் போராடி வருகிறேன்!
மொத்தப் பணியும் முடிந்தால் மீளுவேன்;
முடிய வில்லையெனில் நீ,எனைத் தொடர்ந்து வா!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 27
ஓலை : 6
விலை : 3-00

நமக்கு வந்த மடல்கள்.

O : 1561: பேரன்பின் இனிய ஐயா, என் பணிவான வணக்கங்கள். அறுபத்திரண்டாம் அகவையைத் தொடங்கும் தாங்கள் நூறாண்டுகளுக்கு மேலும் நலமுடன் வாழ்ந்து தமிழினமும் மொழியும் ஏற்றம் பெற, அயராது பாடுபடப் போகும் தங்களுக்கு, என் அன்பான இனிய நல் வாழ்த்துகளும் வணக்கங்களும் உரியவாகுக.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் வருகின்றன. உங்கள் பெரும் பணிக்கு என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் உண்டாகிறது முடிந்தவரை நம் இதழ்களைப் பரப்பவும் கருத்துகளை மற்றவர்களுக்கு வாய்ப்பு நேரும்போதெல்லாம் எடுத்துக் கூறியும் வருகிறேன். பயன்தான் குறைவாக உள்ளது என்பதை எண்ணினால் மிகவும் வருத்தமாக உள்ளது. எவ்வளவு எடுத்துக் கூறினாலும் ஆங்கிலத்திற்கு அடிமையாகித் தமிழைப் புறக்கணிக்கும், தமிழில் கூட கையொப்பமிட வெட்கப்படும் "இவர்களும் தமிழர்களா" என்று எண்ணித் தலை குனிய வேண்டியுள்ளது. இவர்களிடமுள்ள இந்தத் தாழ்வு உளப்போக்கு என்றுதான் நீங்குமோ? 'திருக்குறள் மெய்ப்பொருள் உரை" வெளிவரும் நாளை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். உங்கள் உடல் நிலையை ஓரளவாவது கவனித்துக் கொள்ளுங்கள். நன்றி வணக்கம்.

இவண், தங்கள் அன்புத் தொண்டன்
— சீத்தலைச் சாத்தனார், உ. செல்லூர்.

O : 1562: தோழர் அவர்களுக்கு, அன்னையார் மறைவுற்ற செய்தி எங்களுக்குத் தெரிய வந்தபோது நீங்களெல்லாம் ஊருக்குப் புறப்பட்டுப் போய்விட்டீர்கள் என்ற செய்தியும் கிடைத்தது. நேற்று முன்நாள் மருகர் குணத்தொகையன் மூலம் நீங்கள் சென்னை திரும்பிய செய்தி கிடைத்தது. நேரில் வர எண்ணியிருந்தோம். என் உடல் நிலை ஒரு நாளைப்போல் மறுநாள் இல்லை; வெயிலின் ஏற்றமும் உடலை மிகுதியாகத் தாக்குகிறது. எனவே, இந்தக் கடிதம் மூலம் உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ள முனைந்தேன்.

அன்னையார் முழுமையான வாழ்வு வாழ்ந்து பேரக் குழந்தைகளின் குழந்தைகளையும் கண்டு களிக்கும் அரியவாய்ப்பினைப் பெற்றார்கள். மக்களும் பெயரர் பெயர்த்திமாரும் தமிழ்நலப் பொதுப்பணியில் இரண்டறக் கலந்துள்ள ஏற்றமிகு நிலைமையையும் கண்டு களிப்புற்றார்கள். ஆகவே, அவர்களின் மறைவுக்கு நாம் வாடிச் சாம்ப வேண்டியதில்லை; 'அவர்கள் பெற்ற பேறு வெகு சிலருக்கே கிடைத்தது' என்று எண்ணி அமைதி அடைவோம். அன்புள்ள,

பேரா. சாலை. இளந்திரையன், பேரா. சாலினி. இளந்திரையன்.
அறிவியக்கப் பேரவை, சென்னை-86.

O : 1563: மாண்பு நிறை அம்மா அவர்கட்கு, வணக்கம். நம் ஐயா அவர்களின் புகழ்ப்பேறன்னை இயற்கையில் ஒன்றிவிட்ட

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால் எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும்வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. இந்நிலைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னுரிமை அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியலினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். இதுவே தமிழக விடுதலை ஒன்றே நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் கொள்ளுதல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

சுவடி: 27) தி.பி. உ0உரு – கடகம் – (சூன் – ஆகத்து 94) (ஓலை : 6

தமிழக அரசியலின் இழிவான நிலைகளும் தமிழினத் தலைமைகளின் உட்பூசல்களும்!



இன்றைய நிலையில், தமிழ்நாட்டில் தீவிரமான அரசியலில் ஈடுபடுகின்ற ஐந்து அல்லது ஆறு அரசியல் கட்சிகளே உள்ளன. அதே பொழுது, அரசியலில் ஈடுபடாமல், அவ்வப்பொழுதைய சூழல்களுக்குத் தகுந்தபடி, ஏதாவது கருத்துகளைக் கூறி, ஏதாவது ஒரு கட்சிக்குத் தேர்தல் காலத்தில் ஆதரவளிக்கும், ஆனால் தமிழினத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் உழைப்பதாகக் கூறிக் கொள்ளும் அமைப்புகள், கழகங்கள் பெரிய அளவில் இரண்டு மூன்றும், சிறிய - மிகச்சிறிய - அளவில் பத்துக்கும் மேற்பட்டும் உள்ளன.

இவற்றுள், மேனிலையில் உள்ள அரசியல், அரசியல் அல்லாத கட்சிகளுள், கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் உள்ள அரசியல் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகமும், மானமிகு வீரமணி அவர்கள் செயலாண்மையில் உள்ள அரசியல் சாராத திராவிடர் கழகமும், தமிழினத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் அல்லது கொள்கைகளை அமைத்துக் கொண்டிருக்கின்ற முதன்மையான அமைப்புகள் ஆகும். இவை இரண்டின் வளர்ச்சி நிலைகளும் தந்தை பெரியாரை அடியொட்டியவை. இவை தவிர, பிற அரசியல் கட்சிகளில் சில, தமிழர்களை வடவர்க்கும் பார்ப்பனியத்திற்கும் அடகு வைக்கும் முடிந்தால் விற்றுப் பிழைக்கும் கட்சிகள்! ஓரிரண்டு சாதி, மத அடிமைக் கட்சிகள். அவை போன்றவற்றிற்குக் கொள்கையுமில்லை; ஒரு கோட்பாடும் இல்லை. மற்றவையெல்லாம் பதவிக் கட்சிகளும் பணந்தின்னிக் கட்சிகளுமே ஆகும். இவற்றாலெல்லாம் தமிழும் முன்னேறாது;தமிழினமும் தலையெடுக்காது;தமிழ்நாடும் உரிமை பெறாது. எனவே, அவை பற்றியெல்லாம் கவலைப்படவும் வேண்டியதில்லை.

முழுக்க முழுக்க இனநலக்கட்சியாக இருந்த பெரியார் அவர்களின் திராவிடர் கழகத்தில் இருந்து, அரசியல் ஈடுபாட்டிற்காகவே வேறு பிரிந்த கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். ஆனாலும், இப்பிரிவுக்குத் காரணமாக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் தொடக்கத்தில் இவ்விரண்டு கழகங்களையும் ஒன்றிணைத்து 'இரட்டைக் குழல் துமுக்கி (துப்பாக்கி)'என்று வண்ணித்துப் பேசினார். அத்துடன் பெரியாரே தமக்கு என்றுமே தலைவர் என்றும், 'அவருடைய கொள்கைகளை அரசியல் வகையில் செயலுக்குக் கொண்டு வரவே திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது' என்றுமே அப்பொழுது அண்ணா கூறி வந்தார். திராவிடர் கழகம் மட்டும் என்றும் தாய்க் கழகமாகவே இருந்து பெரியார் உள்ளவரை அவரின் சீரிய தலைமையின் கீழ் அவருடைய கொள்கைகளுக்காகவே இயங்கி வந்தது.

இவ்விரண்டு கழகங்களின் கொள்கை நிலைகளும் பெரியாரின் மறைவுக்குப் பின்னும், அண்ணாவின் மறைவினை அடுத்தும், தம் தம் கொள்கை, கோட்பாடு நடைமுறைகளிலிருந்து சிற்சிறிது மாறுபாடுற்றும், திசை மாறியும் தங்கள் தங்கள் நிலைகளுக்கு ஏற்ப செயல்பட்டு வந்தன. இந்நிலைகளை வெளிப்படையாகச் சொல்வதானால், திராவிட முன்னேற்றக் கழகம் முழுக்க முழுக்க தேர்தல்களை எதிர்நோக்கும் அரசியல் கட்சியாகவும், திராவிடர் கழகம் அதைப் பெரியார் வழியிலேயே குமுகாயத்திற்கு - (கவனிக்கவும், தமிழின, தமிழ்நாட்டு நிலையில் இல்லாமல்) முழுக்க முழுக்க குமுகாய-அஃதாவது சமுதாய மேம்பாட்டிற்கு - உழைக்கின்ற கழகமாகவுமே ஆயின. (இந்நிலைகளை இவ்விடத்தில் மிகக் கூர்மையாக ஆராய்கின்ற தேவை வேண்டாம் என்று கருதி விடப் பெறுகின்றன.)

Scanned with CamScanner

இந்நிலைகளும், ம.கோ. இராமச்சந்திரன் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வேறாக பிரிந்து, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றோர் அமைப்பைத் தொடங்கி அதை வலுப்படுத்தி, தமிழக ஆட்சியைக் கைப்பற்றிய பின், தந்தை பெரியார் பெயர் ஒரு மரபுக்காகப் பயன்படுத்திக் கொள்ளப் பெற்றதே தவிர, அவரின் ஆழமான, கொள்கை (இலட்சிய) நோக்கோடு கூடிய குமுகாய, தமிழின, தமிழ்நாட்டுக் கொள்கை கோட்பாடுகள் அனைத்தும் காற்றில் பறக்கவிடப் பெற்றன. ஆனால், மே...க்கு, மெய்ப்புதலுக்காக, பெரியாரின் 'எழுத்துச் சீர்திருத்தம்' மட்டும், ...ரை மதிக்கின்றோம் என்று காட்டிக் கொள்வதற்காகக் கடைப்பிடி...கப் பெற்றது.

இனி, ம.கோ.இரா.வின் காலத்திற்குப் பின்னர் வந்த கலைஞர் ஆட்சியோ உப்புச்சப்பில்லாத உயிரற்ற தமிழர் ஆட்சியாகக் கொஞ்ச காலம் நடந்து, பின், அதுவும் மாறி அதிமுக ஆட்சியைக் கைப்பற்றிச் சில பூசல்களுக்கும் போராட்டத்திற்கும் பின்னர் செல்வி. செயலலிதா ஆட்சிக் கட்டில் ஏறிய பின், கலைஞரின் தவறான சிலபல நடவடிக்கைகளால், தி.மு.க. வலிவான எதிர்க்கட்சியாகக் கூட இல்லாமல், பெருங்காயம் இருந்த பண்ட மாகவே மாறிப் போனது. அதன் பின் தி.மு.க.வில் அகத்தும் புறத்தும் வெறும் அவலங்களும் குழப்பங்களும் தொடர்ந்த வீழ்ச்சியிலும் உறைந்துபோய், இக்கால், தமிழ்நலமும், இனநலமும், நாட்டு நலமும் கருதிப் பார்க்க முடியாமல், வெறும் கட்சி நலமே கருதக் கூடிய அளவில், மீண்டும் ஆட்சியைப் பிடிக்கக் காலம், இடம், நேரம் பார்த்து உயிர்த்துக் கொண்டுள்ளது. இந்த வீழ்ச்சிப் பொழுதிலும் கூட, அக்கட்சியின் தலைமை சில வேண்டாத உள்பூசல்களை யெல்லாம் வளர்த்தெடுத்துக் கொண்டது; உட்பகைமையை வெளிப்படையாகப் பேசி அதைப் புறப்பகைமையாக விளைவித்துக் கொண்டது. சுருங்கச் சொல்வதானால், புறத்தே அஃதோர் உருவமாக நடமாடிக் கொண்டிருந்தாலும். அகத்தே ஓர் அருவமாகவே நிழலாடிக் கொண்டுள்ளது. இந் நலிவுற்ற இந்த நிலையில் அதனிடமிருந்து தமிழ் நலத்தையும், தமிழின மேம்பாட்டையும், தமிழ்நாட்டு உரிமை மீட்பையும் எதிர்பார்ப்பதெங்கே? ஐயகோ, அவையெல்லாம் வெறும் கனவுகளாகியே போய்விடுமோ! ஓர் அச்ச அவலமே நம்மைச் சூழ்ந்து உள்ளத்தை நெருடுகிறது.

இனி, தமிழினத்திற்காக (மன்னிக்கவும் தளபதி வீரமணி அவர்களின் சொல்லில் சொன்னால்)- சமுகத்திற்காக உழைக்கும் (என்ன சமுகமோ!!) - இல்லை, இல்லை அப்படி உழைப்பதாக அழுத்தம் திருத்தமாகக் கூறிக் கொண்டிருக்கும் - திராவிடர் கழகத்தின் நிலை என்ன? (இவற்றையெல்லாம் ஆய்வு செய்து பார்க்கும் ஒரு தன்னாய்வு நிலைக்கு நாம் வந்து விட்டோமே என்கின்ற முதல் கவலை நமக்கு.)

இதில், பெரியாருக்கு முன்னிருந்த நிலை வேறு ; அவர்க்குப் பின் மணியம்மையார் காலத்திலிருந்த நிலை வேறு; இப்பொழுதுள்ள நிலை வேறு; இவை பற்றியும் நாம் விரிவாக ஆராய வேண்டுவதில்லை. - ஏனெனில் அது எதிரிகளுக்கு இளைக்காரமாகப் போய்விடும் என்னும் அச்சம் நம் நெஞ்சத்தைப் பிசைகிறது. தி.மு.க.வைப் பற்றிச் சொன்னது போல் சுருக்கமாகச் சொல்வதானால், தந்தை பெரியார் காலத் திராவிடர் கழகம் பழுத்த நிலை போன்றது;மணியம்மையார் காலத்துக் கழகம் கனிந்த நிலை போன்றது; நம் வீரமணியார் காலத்துள்ளது அழுகல் நிலை போன்றது; இவ்வளவில் கூட இலைமறை காயாகச் சொல்வதற்கும் நம்மை அன்பர்களும் கழகத் தோழர்களும், எம் தூய தமிழ்த் தொண்டு கருதிப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

இவ்வாறான இவற்றின், இப்பொழுதைய, உள்முகப் புறமுகச் சரிவுகளாலும். கொள்கைக் குளறுபடிகளாலும். தமிழும் தமிழினமும் தமிழ்நாடும் நாளுக்கு நாள் நலிந்தும் மெலிந்தும் சீரழிந்து வருகின்றன என்று சொல்வது மிகையில்லை. ஏனெனில், அவற்றுக்காகவே தோற்றுவிக்கப் பெற்ற கழகங்கள், இவை தாய்மாடுகள் சவளைகளாய்ப் போய் அடிமாடுகள் ஆன பின்னை, கன்றுக் குட்டிகள் பூஞ்சைகளாய் வலுவிழந்து கிடக்க வேண்டியது தானே.

இச்சீரழிவுகள் தமிழினத்தின் பொருள் நிலையிலும், தொழில் நிலையிலும் மட்டுமன்றி, மக்களின் கல்வி நிலையிலும் கலை, பண்பாட்டு, ஒழுக்க நிலைகளிலும் மிகுந்த தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. இந்நிலைகளையெல்லாம் எண்ணிப்பார்க்கும் பொழுது நல்லோர் மனங்களெல்லாம் மிகவும் வெந்து வெதும்புகின்றன; வெம்பி விதும்புகின்றன. இவற்றின் கொள்கை வீழ்ச்சிகளால் ஏற்பட்ட விளைவுகள்தாம் எத்தனை எத்தனை?

வடநாட்டுப் பார்ப்பனிய - முதலாளிய வல்லதிகார ஆட்சியின் அதிகாரங்கள், இருக்க இருக்க, முந்தைய நிலைகளை விட இக்கால் மிகவும் அதிகமாகி வருகின்றன. எதற்கெடுத்தாலும் தில்லியதிகாரத் தலையீடுகள், குறுக்கீடுகள், தாக்கங்கள் தமிழக முன்னேற்றத்திற்கும். தமிழர் நலன்களுக்கும், தமிழ்மொழியின் மேம்பாட்டிற்கும் பெருந் தடைக்கற்களாக வந்து முன் நிற்கின்றன. அவற்றுக்குத் துணை போகின்ற வகையிலேயே தமிழக ஆட்சியமைப்பும் அதன் நடை முறைகளும் இருந்து வருகின்றன. மற்றபடி அண்மைக் காலமாகத் தமிழக அரசுக்குத் தோள் கொடுத்து நிற்கும் திராவிடர் கழகம் கூறுவது போல், தமிழகத்தின் செயலலிதா ஆட்சி, தில்லியரசின் கொடுமைகளை எதிர்த்தோ, வல்லதிகாரத்தை முறியடித்தோ, தமிழினத்திற்குச் சார்பாகவோ, எந்த வகையிலும் நடந்து விடவும் இல்லை; அவ்வாறு நடந்து கொள்ள நினைக்கவும் இல்லை. - சில நேரங்களில், சில

செயல்களில், அதுவும் பார்ப்பனியத்திற்குத் தாக்கம் ஏற்படாத வகையில், தமிழினத்திற்கும், தமிழ்மொழிக்கும் நன்மை நாடுவது போல் நடந்து கொள்வதைத் தவிர இதுவரை எந்த நன்மையோ, செயலோ செயலலிதாவால் திண்மமாகச் செய்துவிடவில்லை அவரின் ஆட்சி அமைந்ததிலிருந்து, அதனை முழுவதும் தம் நன்மைக்கும், தம்மை ஆதரித்துக் கை தூக்குகிற அடிமையர்க்குச் சிற்சில பதவிகள், பொருள்கள், உதவிகள் ஆகியவற்றை எடுத்து வீசுவதற்குமே பயன்படுத்திக் கொண்டார், கொள்கிறார், செயலலிதா. மற்றபடி அவரால் தமிழ் மொழியும், தமிழ் இனமும், தமிழ்நாடும் பெற்ற பயன், வெறும் கவர்ச்சியான திட்ட அறிவிப்புகளைத் தவிர வேறு ஒன்றுமில்லை - இஃது உறுதியானது; உண்மையானது.

அண்மையில் தலையெடுத்து நிற்கும் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டுக் கொள்கையால், தமிழ் நாட்டுக்கெழுந்த சிக்கல்கள் பல என்றால், அவற்றை அடியொட்டித் தமிழனத்துக்கு நேர்ந்த இழிவுகளும் இழப்புகளும் பலப்பல ஆகும். இந்த நிலையில் முதலமைச்சர் செயலலிதாவின் நடைமுறை ஒரு வகையாக இருந்தால், நம் தமிழினத் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட பூசல்களும், நேர்முகத் தாக்குங்களும், எதிரிகள் இப்படிப்பட்ட ஒரு நேரத்தை எதிர்பார்த்து அல்லது உருவாக்கிக் காத்திருந்தார்களோ என்று எண்ண வேண்டிய அளவுக்கு உள்ளன. 'ஊர் இரண்டு பட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பார்கள். ஆனால், இவ்வொதுக்கீட்டு முயற்சிகளால், கொண்டாட்டம் போடுவதற்காகவே கூத்தாடிகள் ஊரை இரண்டு படச் செய்கிறார்களோ என்று ஐயுற வேண்டியுள்ளது. இந்த நிலை, தந்தை பெரியார் காலத்தில் திராவிடர் கழகத்தினின்று அண்ணா பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த போதும், அத் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து ம.கோ.இரா. பிரிந்து. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த போதும் ஏற்பட்ட பூசல்கள், ஏசல்கள், இழிவுகள், பழிகள், பதைப்புகள் தோன்றித் தமிழ்மக்களை அலைக்கழித்து வருத்தி அல்லல்படுத்தினவே, அவற்றைப் போன்றனவாகும். ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்களை, அதிலும் குறிப்பாக 'முரசொலி' யையும் 'விடுதலை' யையும் பார்த்து வருகின்றவர்கள் பதைப்பும், பதற்றமும் அடைந்ததுடன், அவ்வவ் விரவுகளில் தூங்காமல் தொல்லைப்பட்டனர் என்பது, இந்த இனத்தின் மேலும், இம் மொழியின் மேலும், இத்தமிழ் நாட்டு உரிமை மீட்பின் மேலும் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டுள்ளவர்களே உணரக் கூடியதாகும்.

நம் நடுநிலையான அறிவுணர்வுக் கெட்டிய வரையில், இவ்வொதுக்கீட்டுக் கொள்கையில், செயலலிதா நடந்து கொண்டது, நடந்து கொள்வது, நடந்து கொள்ள இருப்பதாகச் சொல்லிக் கொள்வது அனைத்தும் திட்டமிட்ட நாடகக் காட்சிகளாகவே தெரிகின்றன.

Scanned with CamScanner

எதிர்பாராமல் கிடைக்கும் வெற்றியைத் தனக்காக்கிக் கொண்டு, அதன் தோல்வியைக் கலைஞர் மேல் சுமத்துவதற்கு ஒரு கரவான எண்ணம் அவர் உள்ளத்தில் இருப்பது போலவே உணர முடிகிறது. இந்நயவஞ்சக எண்ணத்திற்கு நம் அன்புக்குரிய வீரமணியைப் பயன்படுத்திக் கொள்வதாகவும் அவர் கருதியிருக்கலாம் என்றும் எண்ண வேண்டியுள்ளது. இந்த வகையான அவரின் நடவடிக்கைகளைத் தி.க. பொதுச் செயலாளர் திரு. வீரமணி அவர்களைத் தவிர வேறு யாரும் உண்மை என்றோ உறுதியானவை என்றோ நம்பவில்லை. திரு. வீரமணி அவர்கள்தாம் இதில் முழு நம்பிக்கை வைத்து; செயலலிதாவின் பேச்சுகளுக்கும் செயல்களுக்கும் ஆக்கமான பொருள் கூறி அரண்கட்டி வருகிறார். இவ்வகையில் அவரை அளவிறந்து பாராட்டியும் புகழ்ந்தும் வருகிறார். அத்துடன் செயலலிதாவின் முயற்சிகளையும் செயற்பாடுகளையும் ஆதரிக்காமலும் எதிர்த்தும், அவற்றை ஏமாற்று என்று பேசியும் வருகின்ற எதிர்க்கட்சித் தலைவர்களை, குறிப்பாக கலைஞர் கருணாநிதி அவர்களைஅவர் இழித்தும் பழித்தும் பேசி வருவது மிகவும் வருத்தம் தருகிற செய்தியாகும். இவ்வகையில் திரு. வீரமணி நடுநிலையும் நேர்மையும் பண்பையும் கடைப்பிடிக்க வில்லை என்றே கருதவேண்டியுள்ளது.

கலைஞரைப் பொறுத்த அளவில், அவர் மேல் அவரின் கடந்த கால அரசியல் நடவடிக்கைகளினால் நமக்குப் பற்பல மனக் குறைகள் உண்டு. அவற்றுக்காக நாம் அவர் மேல் குறைபாடுகளும் குற்றங்களும் கூட சுமத்தலாம். அவரின் குடும்ப அரசியல் என்பது வேறு; தமிழக ஆட்சி அரசியல் என்பது வேறு என்பதை அவர் பிரித்து உணராமல் நடந்துகொண்ட சில பல நடவடிக்கைகளால், அவர் செய்ய வேண்டியவற்றையெல்லாம் செய்யாமல் தவிர்த்தார்; செய்ய வேண்டாதவற்றையெல்லாம் செய்து மக்களின் நம்பிக்கையை இழந்தார். ஆனால், அவற்றுக்காக அவரின் தமிழ்ப்பற்றையும் தமிழினப் பற்றையும் அவற்றுக்காகப் பிற வகைகளில் அவர் உழைத்த உழைப்புகளையும் நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. அவற்றுக்காக அவரை இழிவு படுத்தியும் விட முடியாது. அவர் அவரின் கழி இளமைக்காலம் முதற்கொண்டு இத் தமிழ் மொழிக்கும், இனத்திற்கும் நாட்டிற்கும் எழுத்து வகையிலும், பேச்சு வகையிலும், செயல் வகையிலும், ஆட்சி அதிகார வகையிலும், கடந்த அறுபதாண்டுக் காலமாக உழைத்த உழைப்புகளெல்லாம், செயலலிதாவின் கடந்த மூன்றாண்டுக் கால ஆட்சிக்கும் குறைவாகப் போய்விட்டன என்று எந்தக் குருடனும் கூறமாட்டான்; அவ்வாறு கூறினாலும் எந்தச் செவிடனும் கூட ஒப்ப மாட்டான். அவருடைய கடுமையான பகைவனும் கூட இவற்றுக்காக அவரை மிகவும் மதிக்கவே செய்வான்.

கடந்த சில ஆட்சிக் காலங்களில் கலைஞர் நடந்து கொண்ட சில பல குற்றங் குறைகளால், அவருக்கு அரசியலே தெரியாது என்றோ, அல்லது அரசியல் மட்டுந்தான் தெரியும் என்றோ, ஒரு செயலால் நேரும் நன்மை தீமைகளை திரு. வீரமணி போல் அவரால் மதிப்பிட முடியாது என்றோ, பொதுவான அரசியலறிவு உள்ளவனும் கூட கூறமாட்டான். அவ்வாறு இருக்கையில் 69 விழுக்காடு ஒதுக்கீட்டுக் கொள்கையில் திரு. வீரமணி, கலைஞரையும், அவரைச் சார்ந்து நிற்கும் தலைவர்கள் சிலரையும் குறைத்து மதிப்பிடுவதும், செயலலிதாவை மகிழ்விப்பதற்காகவும், ஒப்புரவு செய்வதற்கும், தம்வயப்படுத்து வதற்கும் என்றே, 'நாணயம் கெட்டவர்கள்' 'அறிவு கெட்டவர்கள்' என்றெல்லாம் இழித்தும் பழித்தும் பேசுவது, தரக்குறைவானதும், பண்புக்குறைவானதுமே ஆகும். செயலலிதாவிற்குத் தமிழின் மேலும், தமிழினத்தின் மேலும், தமிழ்நாட்டின் மேலும் உள்ள அக்கறை ஆர்வங்களை விட, கலைஞர்க்கு இருக்கும் உணர்வும் செயல் துடிப்பும் குறைவானவை என்று, வேறு சில பல காரணங் களுக்காக அவரைக் கடுமையாகக் குறை கூறுபவர்களும் கூட, நினைக்கவும் மாட்டார்கள்; சொல்லவும் மாட்டார்கள்.

நம்மைப் பொறுத்த வரையில், 69 விழுக்காடு ஒன்றே தமிழினத்தின் மேம்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் உதவிட முடியாது என்பதே நம் கருத்து.

தமிழகத்தில் தமிழ்மொழி ஆட்சிமொழி ஆகிவிட தமிழக அரசு ஒரு சிறு முயற்சியும் செய்திடவில்லை. அது பயிற்சிமொழியும், கல்விமொழியும் ஆக்கப்படவில்லை. தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ ஐயாயிரம் மழலையர் பள்ளிகள் ஆங்கில மொழிக்கே ஊக்கமும் ஆக்கமும் தருகின்றன. தமிழ்மொழியை முதல் வகுப்பிலிருந்து பட்ட மேற்படிப்பு வரை படிக்காமலேயே ஒருவன் தன் கல்லூரிக் கல்வியை முடித்துக் கொள்ள முடியும்.

இதுவுமன்றித் தமிழ்மொழி அறமன்ற மொழியாகி இன்னும் முழு அளவில் செயற்படுத்தப்படவில்லை. அலுவலக மொழி என்னும் அளவில் கூட தமிழ்மொழி முழுமையாகப் பயன்படுத்தப் பெற வில்லை. இவ்வாறு தமிழ்மொழியைக் கல்வி மொழி, பயிற்று மொழி, ஆட்சி மொழி, அலுவல் மொழி, அறமன்ற மொழி என்னும் தகுதி நிலைகளுக்குக் கொண்டு வராமற் போனால், அதன் தேவை, இன்றியமையாமை வர வரக் குறைந்து, ஒருநிலையில் அது தேவை யற்ற மொழியாகப் போய், சமசுக்கிருதத்தைப் போல் அஃது ஒரு செத்த மொழியாகப் போய்விடும் என்பதில் ஐயம் உண்டோ? இவற்றைச் செயலலிதா இன்னும் செய்யாமல் இருக்கிறார் என்றால், அவர் தமிழ் அழிந்து போக வேண்டும் என்று நினைப்பதாகத்தானே கருத முடியும்.

இனி, இதற்கும் மேலாக இந்திமொழி வேறு நாளுக்கு நாள் பல கோடிக்கணக்கான பொருட் செலவில் நடுவண் அரசால் செல்லப்பிள்ளை போல் வளர்த்தெடுக்கப்பெற்று வருகிறது; மெருகூட்டப் பெற்று வருகிறது. கள்ளத்தனமாக, கரவுத்தனமாக, வல்லாண்மைத்தனமாக, அரம்பத்தனமாக, ஆடம்பரத்தனமாகத் தமிழ்மொழியையும் பிற தேசிய மொழிகளையும் ஏறி மிதித்துத் துவைத்து வருகிறது. இந்த நிலையைத் தமிழக அரசு சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு, அதன் வல்லாண்மைக்கே வழிவிட்டு விலகி நிற்கிறதே தவிர, ஒரு சிறு முணுமுணுப்போ எதிர்ப்போ கூட காட்டவில்லையே. பெரியாரின் காலத்தில் தமிழகத்தில் அடியெடுத்து வைக்கவும் கூட அஞ்சிக் கிடந்த இந்திமொழி , திரு.வீரமணி அவர்களின் மெச்சுதலுக்கு ஆட்பட்டுக் கிடக்கும் செயலலிதா காலத்தில், எடுப்பான குரலில் மிடுக்கான நடையுடன் கொடி கட்டியன்றோ பறந்து வருகிறது.

அத்துடன், இல்லாத அதிகாரமும் ஆட்சிச் சிறப்பும் உள்ளதாகச் செருக்குடன் பேசிவரும் செயலலிதா, காவிரித்தண்ணீருக் கென்று, ஓர் உண்ணா நோன்பு நாடகத்தை மட்டும் கால் நோகாமல், தோள் வலிக்காமல் ஆடி விட்ட நிலையில் அடங்கிவிட்டது போதும், அதுவே அவர் வீரத்திற்கும், 'காவிரிச் செல்வி' என்ற பட்டத்திற்கும் தகுதியாகிவிடும் என்பதாக, தி.க. பொதுச்செயலாளர் நம் மதிப்பிற்குரிய வீரமணி கருதுகிறாரோ என்பது நமக்குத் தெரிய வில்லை. அதே போல், கச்சத்தீவை மீட்கும் அவரின் ஆர்ப்பாட்ட போர்ப்பாட்டு ஆர்ப்பரிப்பு என்ன ஆனதோ, அதுவும் தெரியவில்லை, இக்கோரிக்கையைத் தில்லிவரை எடுத்துச் சென்ற செயலலிதாவை நரசிம்மராவ் பார்ப்பனர் 'முடிந்து போன செய்தியை' இனி மீண்டும் பேச்சுக்குக் கொண்டு வரமுடியாது என்று கூறி அமைவு படுத்திவிடவில்லையா?

இனி, வானொலி, தொலைக்காட்சி முதலிய, மக்கள் மூளையை வெளுக்கும் வடவாரியக் கருவி வலிமை வாய்ப்புகளில் அகலக்கால் ஊன்றிக் கொண்டு , தம் முழுக் காணியாட்சி அதிகாரத்தில் அடித்து வரும் நாத்தடிப்புப் பேச்சுகளுக்கும் கூத்தடிப்புக் காட்சிகளுக்கும் கொம்மாளங்களுக்கும் அளவே இல்லை. அவற்றுள் இந்தி நிகழ்ச்சிகளே 90 விழுக்காடு. இவ்வாறு ஒரு நாளைக்கு பதினெட்டு மணி நேரமும் தொலைக்காட்சியும் வானொலியும் தில்லியின் திறந்த மடங்கள் ஆக்கப்பட்டு, அவற்றின் வழி பார்ப்பனியம் நன்றாக வேர்பிடித்து வளர்ந்து வருவதை திருவீரமணி அவர்கள் அறிந்திராமல் இருக்க முடியாது.

இவற்றுக்கெல்லாம், ஏதோ கண்துடைப்பாக அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கண்டன அறிக்கைகளை வெளிப்படுத்துவதும்,

Scanned with CamScanner

ஓரிரண்டு போராட்டப் பூச்சாண்டிகளைக் காட்டி விட்டு, அனைத்துத் தமிழர் நலன்களுக்கும் திராவிடர் கழகமே - வீரமணியே - கட்டியங் கூறிக் குத்தகை எடுத்துக் கொண்டு போராடி வருவதாகப் போலிப் பூசல்களை எழுப்பியும், வாய்ப்பந்தல்களைப் போட்டு வருவதும் வெறும் நகைப்பிற்கிடமான ஆரவாரக் கூத்துகளே!

தாம் தெரிந்தோ தெரியாமலோ, அல்லது விரும்பியோ விரும்பாமலோ, செயலலிதாவுக்குச் **'சமூக நீதி காத்த வீராங்கனை'** என்று வீறார்ப்புப் பட்டம் வழங்கிவிட்டு, அதற்காகத் தமிழர்நலம் காக்கும் உண்மையும், தன்மானமும் உள்ள அறிஞர்களாலும் தலைவர் களாலும் எதிர்ப்புப் பூசல்களையும் ஏளனச் சிரிப்பு களையும் வருவித்துக் கொண்ட அவலம் நிறைந்த கசப்பான சூழ்நிலையை மறைத்துக் கொள்ளவும் திசை திருப்பவும் வேண்டி, 69 விழுக்காட்டு இடவொதுக்கீட்டுக் கோரிக்கையை வானளாவத் தூக்கிப் பிடித்துக் காட்டி, அரசியல் பூசாரித்தனம் செய்து கொண்டு வரும் நம் பொதுச் செயலாளரின் உள்நோக்கம் என்னவாக இருக்க முடியும் என்று நாம் தீவிரிமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டி உள்ளது. ஒரு வேளை **'பெரியார் பல்கலைக்கழகம்'** அமைக்க விரும்புவதும், **'மருத்துவக் கல்லூரி'** ஒன்றை ஏற்படுத்தி, இன்னும் கோடி கோடியாய்ப் பணத்தைக் குவிக்க நினைப்பதும், அவற்றையும் இதே பாணியில் 'பெரியார் அணுகுமுறை' என்று கூறிக் கொண்டு முதலமைச்சர் செயலலிதாவைத் துணைக்கழைப்பதும், மேலும் சில சில்லறை வருமானத் திட்டங்களும், அவரின் எதிர்காலக் கனவுகளாக இருக்கலாம் என்று நாம் கணிக்க வேண்டியுள்ளது.

நாம் இந்த முடிவுக்கு உடனேயோ, திடுமெனவோ வந்து விடவில்லை. தமிழின மேம்பாட்டில் கலைஞர் திரு. கருணாநிதிக்கும், திரு.வீரமணிக்கும் எப்படி ஒவ்வொரு கொள்கையும் நடைமுறை அணுகுமுறையும் உள்ளனவோ, அப்படியே நமக்கும் ஒரு கொள்கையும் அணுகுமுறையும் நடைமுறையும் உண்டு. தமிழின முன்னேற்றத்திற்கு அவர்கள்தாம் பாடுபடவேண்டும் என்றோ, அவர்கள் பாடுபடுவதுதான் சரி என்றோ, அல்லது அவர்கள் பாடுபடுவதுதான் பயனளிக்கும் என்றோ அவர்களோ அல்லது வேறு யாருமோ கூறிவிடமுடியாது. அவரவர்கள், அவரவர்களுக்குச் சரியென்று பட்டதை அவரவர்கள் பாங்கில் அவரவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். அவ்வாறு செய்வது தவறு என்றோ, இணைந்து செய்வதுதான் சரி என்றோ கூட யாரும் சொல்ல முடியாது. இயற்கையின் இயங்கியல்படி ஒவ்வொன்றும் அவ்வந்நிலைகளுக்கு ஏற்ப, அவ்வந்நிலைகளில் நின்றுதான் இயங்குதல் இயலும்; முடியும். அனைத்தும், அல்லது அனைவரும் ஒன்று சேர்ந்து அல்லது ஒன்றிணைந்து இயங்க இயலுமானால், முடியுமானால் இயங்கலாம். இயங்கக் கூடாது என்பதில்லை. ஆனால் நாம் எதற்கு அவ்வாறு

இயங்குதல் வேண்டும் என்பதையும், மற்று அவரவர் மன், அறிவு, கொள்கை நிலைகளையும் பொறுத்தது, அது. இம்மூன்றிலும் கொள்கை, அறிவு நிலைகளை விட மன நிலைதான் சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டியது. ஏனெனில்,

'எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்' –514

என்றும்,

'மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற் றன்று' –825

என்றம் திருவள்ளுவப் பேராசான் கூறுவார். அவ்வாறு மனம் பொருந்தாதவரோடு இணைந்து எந்த வினையையுமே செய்து விட முடியாது. ஒரே இனத்தவராக இருப்பினும் நம்மோடு இணைந்து இயங்கும் மனம் உடையவரையே நாம் இணைத்துக் கொண்டு செயலாற்ற இயலும்.

'இனம் போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம் போல வேறு படும்' –822

மனவுணர்வால் ஒன்றுபட்டு இயங்கும் தன்மை நல்ல அறிவுடை-யார்க்கும் இயலாது என்பது திருவள்ளுவர் கருத்து.

'பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது' –823

-இவ்வாறு மனநலம் நோக்கி அமைந்து இணைந்து செய்கின்ற வாய்ப்பிருந்தால் ஒரு செயலைச் செய்யலாம். அவ்வாறு இயலாவிடில் என்ன செய்வது? தம் தம்மால் முடிந்தவரை அவரவர் தனித்தனியாகச் செய்து கொண்டு போக வேண்டியதுதானே ! அதற்காக ஒருவரை ஒருவர் ஏன் இழித்தும் பழித்தும், இறக்கியும் தாழ்த்தியும் கூறி, இருக்கின்ற பொருந்தாத நிலையையும் பகை நிலையாக ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். இக்கால் முடுக்கமாகப் பேசப்பெறும் 69 விழுக்காட்டு இட ஒதுக்கீட்டுக் கொள்கை எல்லாருக்குமே சரி என்று படுகின்ற கொள்கைதான். தமிழ்நாட்டில் உள்ள தமிழர்க்கு நலம் நாடாத பேராயக் கட்சியும், பாரதிய சனதா கட்சியும் கூட, இங்குள்ள அரசியல் நிலை நோக்கி அக்கோரிக்கையை ஆதரிக்கவே செய்கின்றன. இந்நிலையில் தமிழர் நலம் கருதுகின்ற கலைஞர் அதை வரவேற்காமல், ஒப்பாமல் இருப்பாரா? திரு. வீரமணிக்குத் தெரிகின்ற இனநல நோக்கம் அவருக்குத் தெரியாமல் இருக்கும் என்று கருத முடியுமா?

Scanned with CamScanner

ஒரு செயலை ஒவ்வொருவரும் வேறு வேறு வழிமுறைகளில் செய்யலாம். அவற்றுள் தாம் காட்டும் வழிமுறை ஒன்றுதான் சரி என்று அடித்துப் பேசி, பிறருடைய அணுகுமுறையைச் சரியில்லை என்றோ, நேர்மையில்லை என்றோ, அறிவானது இல்லை என்றோ, நாணயமானதாக இல்லை என்றோ, அதில் களங்கம் கற்பித்து இழித்தும் பழித்தும் பேசி, ஒரே இனத்தலைவர்களுக்குள் வேறுபாட்டுணர்வையும் பகையையும் வளர்த்துக் கொள்வது இனநலம் - திரு. வீரமணியின் சொல்லில் சொல்வதானால் 'சமூக' நலம் - கருதுவது ஆகுமா? ஆகாது, இவ்விருவேறு கருத்துணர்வுகளுக்கும் மாறுபாடான வேறுபாடான பகைக்கொள்ளும்படியான உணர்வுப் போராட்டத்திற்கு அடிப்படையானவரே முதலமைச்சர் செயலலிதாதான் என்று நாம் கணிப்பது எப்படித் தவறாக இருக்க முடியும்? பார்ப்பனீயத்தின் அடிப்படை அணுகுமுறையே ஓரினத்தவரை, ஏதோ ஒரு காரணத்தை முன்வைத்து வேறு பிரிப்பது, 'பேதப்படுத்துவது என்பது கல்மேல் எழுதப்பெற்ற வரலாறு அன்றோ? 69 விழுக்காட்டு ஒதுக்கீட்டில் செயலலிதா வெற்றி பெறுகிறாரோ இல்லையோ; இதில் வெற்றி பெற்றுவிட்டாரே! கலைஞரும் வீரமணியும் தமிழின முன்னேற்றத்திற்குப் பாடுபடும் இரண்டு வீரர்கள்; தலைவர்கள்! இருவருமே தங்கள் பெருங் கொள்கையை விட்டு விட்டு, இவ்வொரு கோட் பாட்டில் வேறு பிரிந்து பகை ஏற்படுத்திக் கொள்ளும்படியாக ஆகிவிட்டதே! இந்நிலை தமிழின நலனுக்கு நல்லதுதானா? உகந்தது தானா? கலைஞரை மெலிவுபடுத்தி அரசியல் களத்திலிருந்தே அகற்றுகின்ற - செயலலிதாவை முதலமைச்சர் பதவியில் நிலைப் படுத்துகின்ற முயற்சியில் அல்லவா கொள்கைப் போர், அணுகுமுறைப் போர் நடந்துகொண்டிருக்கிறது. இதற்குச் செயலலிதா காரணமில்லை யென்றால், வேறு யார் காரணமாக இருக்க முடியும்?

இவ்வகையில் கடந்த மூன்று மாதங்களாய் அவ்விரு தமிழின நலம் விரும்பிகளும் தங்கள் 'முரசொலி'யிலும்; 'விடுதலை'யிலும் மாறி மாறிச் சொற்களையும், வெறுப்புகளையும், கருத்துப்போர் என்னும் பெயரில் ஒருவர் மேல் ஒருவர் வீசிக் கொள்கிற செயல்கள் தமிழின நலம் நாடும் அனைவர்க்கும் வருத்தத்தையும் மனச் சுளிப்பையும் ஏற்படுத்துவன.

முன்பெல்லாம் கலைஞரை நம்பிக்கையுடனும் மதிப்புடனும் அளவிறந்து பாராட்டிக் கொண்டிருந்த திரு.வீரமணி அவர்கள், செயலலிதாவின் தொடர்புக்குப் பின், படிப்படியாக அவர்மேல் கசப்புகளையும் வெறுப்புகளையும் வீசியவர், இக்கால் நெருப்புகளை வாரி வீசுகிறார். ஆனால் இதற்கு மாறாக, செயலலிதாவை அளவிறந்து பாராட்டும் ஒரு பக்க இருபக்க அவரின் மிகப் பெரிய தோற்றத்துடன் அரசு விளம்பரங்களைத் தம் 'விடுதலை' ஏட்டில் அச்சியற்றி

ஊரெல்லாம் உலகமெல்லாம் உலவ விடுகிறார். விளம்பரங்கள்தாம் என்றாலும் அவற்றில் உள்ள தகுதியற்ற புகழுரைகளை ஒப்பித்தானே தம் 'விடுதலை' விளம்பர வண்டியில் உலா விடுகிறார். இவற்றால் செயலலிதாவுக்குப் புகழ் 'விடுதலை'க்குப் பணம் ! பார்வைக்கு அவற்றில் சிலவற்றைக் கீழே தருகிறோம்:

"தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்', சமூக நீதி காத்த வீராங்கனை !'

- (ஒருபக்கம்) -'விடுதலை' 28-04-1994

புரட்சித் தலைவியின் மூன்றாண்டுக் கால பொற்கால ஆட்சியில் எழுச்சிமிகு தமிழகம் உருவாகிறது'

- (இருபக்கம்) 'விடுதலை'23-06-1994

ஏற்றமிகு தலைமை! ஆற்றல் மிகு வலிமை !
புரட்சித் தலைவியின் பெருமை !
வையம் வாழ்த்தும் டாக்டர் புரட்சித்தலைவி ! :

- (ஒரு பக்கம்) 'விடுதலை' - 24.6.94

"தரணி போற்றும் மாண்புமிகு முதல்வர்"

- (ஒரு பக்கம்) 'விடுதலை' - 25.6.94

"ஜெயலலிதாவின் சக்தி வாய்ந்த தலைமையின் கீழ் திடமான தமிழகத்தை உருவாக்க ஒற்றுமையுடன் நாம் முன்னேறுவோம்."

- (ஒரு பக்கம்) 'விடுதலை' - 27.6.94

"தன்னேரிலாத் தலைமை! புரட்சித் தலைவியின்
பொற்கால ஆட்சி!

- (ஒரு பக்கம்) 'விடுதலை' - 28.6.94

" புரட்சித் தலைவியின் மூன்றாண்டுக் கால பொற்கால ஆட்சி!"

- (ஒரு பக்கம்) 'விடுதலை' - 29.6.94

"புரட்சித் தலைவியின் இன்றைய சாதனை
நாளைய வரலாறு"

" எல்லை கடந்து புகழ் பரப்பிடும் மாபெரும் தலைவியாம்
மாண்புமிகு முதலமைச்சர்"

- (ஒரு பக்கம்) 'விடுதலை' - 30.6.94

இப் புகழுரைகளை ஏற்புச் செய்தவர் போல், 27.4.94-இல் 'தேவி' இதழின் நேருரையில் செயலலிதாவைக் கீழ் வருமாறு தகுதிப் படுத்துகிறார். திரு. வீரமணி.

"சமூக நீதியைப் பொறுத்த வரையில் அவர் (செயலலிதா) தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறார்".

அவ்வகையில் 'தேவி' இதழ் ஜெயலலிதாவைப் பற்றிய அவர் மதிப்பீட்டை அப்படியே வெளியிட்டிருக்கிறது. அதில் ஜெயலலிதாவை, வீரமணி, 'திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியின் அடையாளம்' என்று கூறுவதாக வெளிப்படுத்தி மகிழ்ச்சியடைகிறது. கீழே படியுங்கள்:

'தந்தை பெரியார் முகாமில் இருந்தே ஜெயலலிதாவை திராவிட இயக்க பரிணாம வளர்ச்சியின் அடையாளமாக ஏற்றுக் கொண்டிருக்கும் கி: வீரமணி"

-'தேவி' 27.4.94

எப்படியிருக்கிறது பாருங்கள்! ஜெயலலிதா திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியின் அடையாளமாம்! எதுபற்றிப் பேச வந்தவர் எதற்கும் எதற்கும் முடிச்சுப் போட்டுப் பேசுகிறார், பாருங்கள்! தாம் வழக்கறிஞராக இருப்பவர், பேசத் தெரிந்தவர் என்ற காரணத்தால் கருத்துப் பொருத்தம் இல்லாமல் பேசி விடுவதா? அதுவும் தந்தை பெரியாரை முன் வைத்து செயலலிதாவை அவருடைய இயக்கத்தின் பரிணாம வளர்ச்சி என்று நா வலிக்காமல், நெஞ்சு நோகாமல் பேசுகிறாரே, இதன் அடிப்படை என்னவாக இருக்க முடியும்? பெரியாரின் தகுதி அனைத்துக்கும் ஒப்ப அவருடைய அடுத்த பிறங்கடை (வாரிசு) என்றும் கூட இதில் பொருள் கொள்ள முடியுமே! அவ்வாறானால், பெரியாரின் வெளிப்பாடுகளாக வந்து நின்ற கே.கே. நீலமேகம், தி.பொ.வேதாசலம், குத்தூசி குருசாமி, அழகிரிசாமி, அறிஞர் அண்ணாதுரை, வே. ஆனைமுத்து, என்.வி.நடராசன், கலைஞர் கருணாநிதி, பேரா. அன்பழகன், கி.வீரமணி முதலிய பெரும் பெரும் ஆற்றலும் அறிவும் வாய்ந்த பிறங்கடைகள் எல்லாம், இயக்கப் பரிணாம வளர்ச்சியின் அடையாளம் இல்லையா? இனி, இவர்களெல்லாம் வேறு, ஒரே மரத்தின் தொடர் விளைவுகள்; ஜெயலலிதா அவ்வாறில்லை; பார்ப்பன இனத்திலிருந்து வளர்ச்சியடைந்த ஒட்டு மரத்தின் தொடக்கம் என்னும் பொருளில் திரு. வீரமணி கூறியிருந்தால், அதை வெளிப்படுத்திக் காட்டியிருக்க வேண்டியவர் செயலலிதாவே தவிர, வீரமணியல்லர். அதுவும் வெறும் சொற்களால் அன்று, செயல்களால். 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டு நிலை ஒன்றினால் மட்டுமன்று; அதுபோலும் பல்வேறு இனநல, அறிவுநல, மூடநம்பிக்கை, சாதி, மத ஒழிப்பு முதலிய செய்தற்கரிய செயல்களால். அதுவும் செய்தற்கரிய செயல் என்பது, கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதன்று. தம்மையே இழந்து கொள்வதும் ஈகப்படுத்திக் கொள்ளும் ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள்வினை. அதுவும் குற்றம் இல்லாமல் குடிசெய்து வாழ வேண்டும். ஆயிரக்கணக்கான குற்றங்களையும் ஆரவாரச் செலவழிப்புகளையும், மிடாவிழுங்கித் தனமான கொள்ளையடிப்புகளையும் செய்து கொண்டு, போலித்

தனமான பொய்யான புனைவான, கடுமையான, அரம்பத்தனமான ஆட்சி செய்து கொண்டு, வீரமணி போலும் ஒருசிலர்க்கு வாய்க் கரிசிபோட்டு அவற்றை மலிறத்துக் கொண்டு ஆளுமை செய்யும் போலி ஆட்சி அருஞ்செயலோ, செயற்கரிய செயலோ ஆகா, அதுவும் வீரமணி போலும் எங்கோ ஒருவர் சொல்லிவிட்டால், பெரியாரின் பரிணாம வளர்ச்சியின் அடையாளமோ' 'சமூக(!) நீதி காத்த வீராங்கனை'யோ ஆகிவிட முடியாது. நடுநிலையும், நேர்மையும், உண்மையும், ஒழுக்கமும், தம் கொள்கையில் இம்மியும்தாழாமையும் கொண்ட சான்றோர் பலர் சொல்லுதல் வேண்டும்.

இதே செயலலிதா பற்றி, அவர் ஆட்சிப்பற்றி, இதே பெரியாரிடம், இதே கொள்கையில், நாம் மேற்காட்டிய குண நலன்களுடன் அருஞ்செயல்கள் ஆற்றிக் கொண்டிருக்கும் நம் மதிப்பிற்குரிய **'சிந்தனையாளன்'** ஆசிரியர் **'வே. ஆனைமுத்து'**, என்ன சொல்கிறார் என்பதற்கு ஒரு சோற்று ஒரு பதமாக ஒரு கருத்தைப் பாருங்கள்:

'இலஞ்சக் கொள்கையும், காலித்தனமும், கொலையும், அடியும் உதையும், கற்பழிப்பும், தமிழக அமைச்சர்கள், அதிகாரிகள், காவல் துறையினரின் அரவணைப்போடு அதி.மு.க. ஆட்சியில் (அதாவது 'பெரியாரின் பரிணாம வளர்ச்சியின் அடையாளம் என்று வீரமணி அவர்கள் மெச்சுகின்ற ஜெயலலிதாவின் ஆட்சியில்) தலைவிரி கோலமாக நடைபெறுகின்றன.'

-'சிந்தனையாளன்' - சூன் '94

இனி, இதே கருத்து வெளிவந்த இதழில்தான் திரு. வீரமணி அவர்களின் 'திராவிடர் கழகம்' பற்றியும் ஒரு மதிப்பீடு வந்துள்ளது. அஃது இது:

'சுயமரியாதை என்பது சுயஅறிவுக்கு மரியாதை தருவது. எல்லா அடிமைத்தனங்களிலிருந்தும் மனித குலத்தை விடுவிப்பது என்பதே தந்தை பெரியாரின் தத்துவம். 'சுயமரியாதை இல்லாத மனிதன் வெறும் பூஜ்யத்துக்கு ஒப்பானவன் என்பது மேதை அம்பேத்காரின் தத்துவம். இவையெல்லாம் இன்று பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தாராலேயே பாழ்படுத்தப்படுகின்றன. பெரியார் பெயரைப் பயன்படுத்தும் திராவிட அரசியல் கட்சிகளால் (தி.மு.க., அதி.மு.க) கொச்சைப்படுத்தப்படுகின்றன. ...... பெரியார் பணத்தைக் குவித்து வைத்தார். இந்தப் பணத்தைப் பிடித்துக்கொண்டவர்களுக்குச் சரியான கொள்கைப் புரிதல் இல்லை.'

- அதே இதழ். பக்கம்: 2.

இந்த நிலையில், திரு. வீரமணி அவர்கள் முதலமைச்சர் செயலலிதாவை அனைத்து நிலைகளிலும் உயர்த்திப் பேசுவதும்,

அதையே ஓர் இயக்கமாக ஆக்கிக் கொண்டு வருவதும், அவருக்கு எதிராக உள்ள கலைஞர் கருணாநிதி அவர்களை அனைத்து நிலைகளிலும் தாழ்த்தியும் இழித்தும் பழித்தும், அவரை அரசியல் களத்திலிருந்தே அப்புறப்படுத்திவிட்டு, அம்மையார் ஜெயலலிதாவின் ஆட்சிக்கே நிலைப்பாடு எய்தும் வகையில் பேசியும் எழுதியும் வருவதும், கடந்த சில மாதங்களாகவே, மெதுமெதுவாக நடந்து, இக்கால் வலுத்து வருவது, நடுநிலைத் தமிழர்களுக்கும், உண்மைத் தமிழின முன்னேற்றம் கருதுபவர்களுக்கும் பெரும் வருத்தத்தையும் கவலையையும் உண்டாக்கி வருகிறது.

'செயலலிதா ஆட்சி, 69 விழுக்காடு இடவொதுக்கீட்டில் இரட்டை வேடம் போடுகிறது' என்று கலைஞர் சொல்கிறார் என்றால், அதற்கு வீரமணியார் தரும் எதிர்க்கருத்தைப் பாருங்கள்:

'தி.மு.க. ஆட்சியின் போது நாங்கள் இந்த ஆணையைத் தீ வைத்து எரிக்க முயன்ற போது, எங்களை எரிக்க விடாமல் எங்களைக் கைது செய்து, பின்னர் விடுதலை செய்தனர். அதற்காக தி.மு.க. இரட்டை வேடம் போடுகிறது என்று நான் சொல்ல மாட்டேன், அவருடைய அரசியல் நிலை புரிந்த காரணத்தால்'

- வீரமணி, 'தேவி' நேருரையில்.

'தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனைமரத்துக்கு நெறியேறுகிறது' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். வீரமணியின் எதிர்ப்புரையில் இவ்வுண்மை தெளிவாகிறது. ஜெயலலிதாவின் வழக்கறிஞர் போல் வீரமணி வழக்காட வருவது இதில் விளங்கு கிறதே! இவ்விடத்தில் 'ஜெயலலிதா அரசு இரட்டை வேடம் போட வில்லை' என்று காட்டுவதுதானே! தி.மு.க. அரசு மட்டும் இரட்டை வேடம் போடவில்லையா என்று எதிரடி வழக்குப் பேச வேண்டுமா? அது ஜெயலலிதாவிற்கும் வீரமணிக்கும் இருக்கும் நெருக்கத்தை விட, கலைஞர் மேல் வீரமணிக்கிருக்கும் காழ்ப்புணர்வையன்றோ வெளிப்படுத்திக் காட்டுகிறது! இவ்வாறு பேசுவது இன உணர்வை உடைப்பதாகாதா?

இனி, திரு. வீரமணி அவர்களின் இன்னோர் அறிக்கை கலைஞர் மேல் எத்தகைய வெறுப்பு நஞ்சைத் தெளிக்கிறது என்று பார்ப்போம்.

தமிழக அரசு தன் பெரும்பான்மை வலிவைப் பயன்படுத்தித் தனக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், 31 (சி) பிரிவின் கீழ், 69 விழுக்காடு ஒதுக்கீட்டை மாநில அரசு கடைப்பிடிக்கலாம் என்ற வகையில், மாநிலச் சட்ட மன்றத்தில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, அதைக் குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவுக்காக - ஒப்புதலுக்காக - நடுவணரசுக்கு அனுப்பி வைக்கிறது.

இச் சட்டவரைவைச் சட்டப் பேரவையுள் உள்ள திமுகவின் ஒரே உறுப்பினர் உள்பட, அனைத்து எதிர்க்கட்சிகளும் வரவேற்கின்றன. ஆனாலும் இச்சட்டவரைவு குடியரசுத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படாவிடில் சட்டமாகாது.

இந்த உண்மையையும், இதில் உள்ள சிக்கலையும், இடையூறையும் வெளிப்படுத்திக் கலைஞர் இவ்வாறு ஒரு கூட்டத்தில் பேசுகிறார்.

'சட்டப் பேரவையுள் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார் ஜெயலலிதா என்றால், அதை வைத்து நாக்கை வழித்துக் கொள்வதா? இங்கே கொண்டு வந்தால் போதுமா? அதை மத்திய அரசு ஏற்க வேண்டாமா? குடியரசுத் தலைவரின் கையெழுத்து வேண்டாமா? அதற்குப் பின் உச்சநீதி மன்றத் தீர்ப்பு எப்படி அமையுமோ? அதைப்பற்றியெல்லாம் ஆராய வேண்டாமா?

-கலைஞர் பேச்சு - 'முரசொலி' 1-4.94

நம்மைப் பொறுத்தவரையில் கலைஞரின் இப்பேச்சில் உள்ள கருத்து வெளிப்பாட்டில் பிழையில்லை. சட்ட வரைவு நிறைவேறி விடுவதாலேயே அது சட்டம் ஆகி விடாது என்பதால், அது நிறைவேறுவதில் உள்ள இடையூறுகளைப் பற்றிக் கூறுவதில் தவறு ஒன்றும் இல்லையே. ஆனால், 'நாக்கை வழித்துக் கொள்வதா' என்பது-தான் சூடானதும் சற்று வேகமானதுமான சொற்கள். ஒருவகையில் தாழ்வானது என்றும்கூட சொல்லாம் அதற்குப் பகரமாக ' அதை வைத்து என்ன செய்வது, என்று பேசியிருந்தால் பிழையில்லை. எப்படிக் கூறினாலும் தம்மைக் குறை கூறுகிறார்களே என்னும் எரிச்சலான மனவெழுச்சியில் கலைஞர் தமக்கேயுள்ள கொஞ்சம் கற்பனை கலந்த நாடக பாணியில், உரையாடலில் எழுதுவது போல் பேசிவிட்டார்.

கலைஞரின் இம் மனவெழுச்சியுரை கூட வீரமணி அவர்களின் முந்தைய அறிக்கையை ஒட்டியே கூறப்பெற்றிருக்க வேண்டும் என்று நாம் கருதுவதற்கும் இடம் உண்டு. அந்த அறிக்கை 24.6.94 அன்றைய 'விடுதலை' யில் வெளிவந்துள்ளது. அஃது இது.

'குடியரசுத் தலைவரின் ஒப்புதல் வருமுன்னரே சில அரசியல் கட்சித் தலைவர்கள்,

'இது செல்லுபடியாகாத சட்டம்'
'இதை எதிர்த்துக் கோர்ட்டுக்குப் போவார்கள்'
'இந்தச் சட்டத்தால் பயனில்லை'

- என்று மேடைகளில் புலம்புவதும் அறிக்கை விடுப்பதும் முறையானதுதானா?

- இவர்களே தூண்டிவிடுகிறார்கள் என்று தானே பொருள்.

Scanned with CamScanner

- நிறைவேறும் முன்பே 'அது செல்லுபடியாகாத சட்டம்' என்று பொறுப்பின்றிப் பேசுவதா?

- அதுவும் அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் சட்ட மன்றத்திலும் அதை ஆதரித்துவிட்டு, வாக்களித்து விட்டு இப்படிப் பேசுவது 'அசல் அரசியல்' அல்லாமல் வேறு என்ன?

'உச்ச நெறி மன்றத்தில் மன்னிப்புக் கேட்பது சரிதானே; வேறென்ன செய்வது?' என்பது, மட்டும் அரசியல் இல்லையா? அது அரசியல் இல்லை என்றால் இதுவும் அரசியலில்லையா? இதற்கு மட்டும் பொறுப்பேற்று (வக்காலத்து வாங்கி)ப் பேசும் திரு. வீரமணி, அதற்கு மட்டும் கலைஞரைத் தாக்கிப் பேசுவது, ஏன்? அது சொந்த விருப்பு வெறுப்பு ஆகாதா?

இந்த அறிக்கையில் பயன்படுத்தியுள்ள 'புலம்புவது', 'தூண்டி விடுகிறார்கள்' 'பொறுப்பின்றி' 'அசல் அரசியல்' என்னும் சொற்களில் கலைஞர்மேல் வெறுப்பு புலப்படவில்லையா?

திரு. வீரமணி அவர்களின் அறிக்கை மேலும் தொடர்கிறது:

'உச்சநீதி மன்றத்தில், உடனே, 'கோர்ட் அவமதிப்புச் செய்ய மாட்டோம்; உச்சநீதி மன்ற ஆணைக்குக் கட்டுப்படுவோம்' என்று தமிழக அரசு அதிகாரிகள் எழுதிக் கொடுத்தார்கள்.'

'உச்சநீதி மன்றத்தில் தடை உள்ள போது, எந்த ஓர் அரசும் அதிகாரிகளும் கோர்ட்டில் நேரில் சென்று, 'அதை மீறுவோம்' என்றா கூற முடியும்? இது எங்காவது நடந்துள்ளதா?'

'இதைப் போட்டுக் குழப்பினால், அது தான் 'கோயபல்ஸ் பாணி வேலை' ஆகும். இதில் விளையாடுவது அரசியல்! அரசியல்! அசல் அரசியல்!'

'குறுக்குச்சால் ஓட்டுவதனால், நமது பிரதான நோக்கமான 69 விழுக்காடு பாதுகாப்பது பாழ்பட்டு விடுமே என்ற கவலையே இல்லை. ஒரு மாநிலை அரசை அரசியலுக்காகக் குறை கூறுவது பிரச்சினையைத் தீர்க்குமா?'

'பிரச்சினையின் மீது உண்மையிலேயே கவலையும் பற்றுதலும் இருக்குமேயானால்,இதற்கு ஆதரவுகாட்டுகிறோம்என்று சொல்லுகிற மாநில அரசைக் கெட்டியாகப் பயன்படுத்தி ஒன்று பட்டுக் காரியமாற்றுவார்கள். இந்தச் சூழ்நிலையில் இதற்கு மாறாக நடந்து கொள்பவர் யாராக இருந்தாலும், அரசியலுக்காக முக்கியமான பிரச்சினைகளையும் பலிகொடுப்பவர்களே ஆவார்கள்'

- வீரமணி அறிக்கை -'விடுதலை', 24.6.94

Scanned with CamScanner

இவ்வறிக்கையின் உள்ளுணர்வுகளை, நடுநிலையுள்ள அன்பர்கள் நன்கு கவனிக்கவேண்டும்.கலைஞர் மாநில அரசு இயற்றிய சட்டவரைவு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப் பெற்றுள்ளது. இச்சட்ட வரைவைத் தி.மு.க. உட்பட அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் சட்டமன்றத்தில் ஆதரித்து அதை முழுமையாக நிறைவேறச் செய்கின்றனர். இது இங்கு நடந்தது.

இனி, கலைஞர் ஓர் ஆட்சித் தலைவராக இருந்த, ஓர் அரசியல் நோக்கராக - அறிஞராக இருக்கின்ற தன்மையில், அச்சட்ட வரைவுக்குள்ள சட்டத் தடைகளை ஞாயமான முன்னறிவிப்புடன் வெளிப்படுத்துகிறார். இது சட்டவரைவை நிறைவேற்றிக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப் பெற்ற பின் தேவையில்லை என்றாலும், அதிலுள்ள நடைமுறைச் சட்டச் சிக்கல்களைக் கூறி எச்சரிக்கை செய்வது அவ்வளவு பெரிய குற்றமாகிவிடாது என்பதே நம் கருத்து. இதைக் கலைஞர் சொல்லவில்லையானாலும் அது நடை முறைக்கு வரும்பொழுது ஆட்சியாளர் உள்பட அனைவருக்கும் தெரியத்தான் போகிறது.

ஆனால், அதற்காக, அவரைக் 'கோயபல்ஸ் பாணி வேலை' செய்கிறார், 'அரசியலுக்காகக் குறை கூறுகிறார்,' 'மாறாக நடந்து கொள்கிறார்','பிரச்சினைகளைப் பலி கொடுக்கிறார்' என்றெல்லாம் மண்டையில் அடிப்பதுபோல் தாழ்த்திப் பேசுவது, இனநலம் காக்கும் அணுகுமுறை ஆகுமா? கலைஞரின் சொற்களை விட, அவர் மதிக்கத்தக்கவர் இல்லையா? அவர் சொற்களில் விருப்பு வெறுப்பு இருந்தால், வீரமணி அவர்கள் அவரின் கருத்தை மட்டுமே எண்ணிப் பார்த்திருக்கலாமே. அப்பொறுமைப் பார்வை இனநலம் காக்கும், அரசியல் நோக்கமற்ற தலைவர் ஒருவர்க்கு இருப்பது பெருமைதானே!

இன்னோர் இடத்தில் வீரமணியின் விடுதலை எழுதுகிறது:

'ஆளும் கட்சிக்கு எதிராக அணி அமைப்பதற்கு இதை விட்டால் வேறு வாய்ப்பு எது என்று கவலையுடன் செயல்படுபவர்களும் உண்டு. அதற்காகப் பொய்யையே திருப்பித் திருப்பிக் கூறி அதை உண்மையாக்கிவிட முடியும் என்று கோயபல்ஸ் தத்துவத்தைப் பின்பற்ற ஆரம்பித்திருக்கிறார்கள்'.

'அந்த உச்சநீதி மன்ற அவமதிப்பு வழக்கு மனு தொடர்பாக உச்சநீதி மன்றம் தமிழக அரசின் தலைமைச் செயலாளரையும் நல்வாழ்வுத்துறை அதிகாரிகளையும் எச்சரித்துக் கண்டிக்கிறது'.

அதிகாரிகள், 'உச்சநீதி மன்றத்தின் இடைக்காலத் தடை அமுலில் இருக்கும் வரை, உச்சநீதி மன்றத்தின் ஆணையான 50 சதவீத ஒதுக்கீட்டையே பின்பற்றுவோம் என்று உறுதி அளிக்கிறார்கள்.

அதிகாரிகள் அப்படித்தானே பதிலளிக்க முடியும். உச்சநீதி மன்ற ஆணையை மதிக்க மாட்டோம் என்று அரசு அதிகாரிகள் கூற முடியுமா?

'— தமிழக அரசு அப்படிக் கூறி விட்டதாகப் பொய்ப் பிரச்சாரம் செய்து மக்களைக் குழப்ப நினைப்பது 'கோயபல்ஸ்' தனம் அல்லவா? கருத்துகளில் மாறுபடலாம், விமர்சனங்களில் வேறுபடலாம். அவை வேறு. உண்மையையே சிதைத்து, திரித்துப் பொய்ப்பிரச்சாரமாக்க முயல்வது கடைந்தெடுத்த அரசியல் அநாகரிகம் அல்லாமல் வேறு என்ன?

- 'விடுதலை' ஆசிரியவுரை. 25.6.94

- இப்பகுதியில்தான் எத்தனை இழிவுச் சொற்கள்! கீழ்த்தரமான குற்றச்சாட்டு.

'அதிகாரிகள்' கொடுத்த வாயுரை, உறுதிப்பாடு, ஆட்சி கொடுத்ததாகாதா? அதை விளக்குவதோடு விட்டு விடுவதே சரியான கடைப்பிடிப்பு. அதை விட்டு விட்டு அதைப் பொய்ப்பிரச்சாரம், கோயபல்ஸ்தனம், கடைந்தெடுத்த அரசியல் அநாகரிகம் - என்பவையெல்லாம் மிகையானவை; குறும்புத்தனமானவை. ஜெயலலிதாமேல் சந்தனத்தையும். கலைஞர் மேல் சாணியையும் பூசுவது! இது தேவைதானா?

அடுத்து, பிரதமரிடம் சென்ற தூதுக்குழுவில் கலைஞர் கலந்து கொள்ளாதது பெரிய குற்றச்சாட்டாக திரு. வீரமணி கருதுகிறார். தப்பில்லை. ஆனால், அதைக் கருத்தளவில் எடுத்துக் சொன்னால் கலைஞர் உணர்ந்து கொள்ள மாட்டாரா? அல்லது நாடுதான் ஒப்புக் கொள்ளாதா? அதை இவ்வாறு கூறுகிறார், நம் பொதுச் செயலாளர்:

'பிரதமரிடம் சென்ற தூதுக்குழுவில் எல்லோரும் ஒன்று திரண்டு சென்றிருந்தால் தமிழ் நாட்டிற்கு மேலும் பெருமை சேர்ந்திருக்கும் என்பதும் நமது ஏக்கப் பெருமூச்சு ஆகும்.'

வீரமணி அறிக்கை - 'விடுதலை' 27.6.94

இவ்வாறான கருத்துகளுக்குப் பின் கலைஞர் 'முரசொலி' யின் கீழ்வருமாறு எழுதுகிறார்.

'இட ஒதுக்கீட்டைப் பாதுகாப்பது என்பதை விட ஜெயலலிதாவை இந்த இக்கட்டிலிருந்து எப்படியாவது காப்பாற்றி விட வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டவர்கள் சிலபேர் தமிழர்களின் ஒற்றுமை பற்றிக் குடம் குடமாய்க் கண்ணீர் வடித்தபடியே இருக்கிறார்கள்'

- 'கலைஞர்' 'முரசொலி' - 30.6.94.

இதற்கடுத்து, கலைஞரின் ஆவடிப்பேச்சு கொஞ்சம் சூடாகவே இருந்தது. அஃது, இது:

'தமிழ் நாட்டிலே ஆளும் கட்சியை ஆதரிக்க - ஆளுங்கட்சிக்கு முட்டுக்கொடுக்க உனக்கு ஆசையாக இருந்தால் செய்து கொண்டு இரு. யார்யாருக்கு ஆசை - இருக்கிறதோ செய்து கொண்டிருங்கள் நன்றாக முட்டுக் கொடுங்கள். அவருக்கு முட்டுக் கொடுப்பது மாத்திரம் அல்ல. எங்கேயாவது அவர்கள் 'கட் - அவுட்' இருந்து, அது கீழே சாய்ந்தால் அதற்கும் போய் முட்டுக் கொடுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை.

'ஆளுங்கட்சிக்கு வேண்டுமானால் ஆலவட்டம் சுழற்றட்டும் ஆளுங்கட்சிக்கு இன்றைக்கு அடிவருடிகளாக இருக்கும் சில பேருக்குத் தான் நம்மீது அதிக ஆத்திரம் வருகிறது'

- கலைஞர். ஆவடிப்பேச்சு 'முரசொலி' 1-7-9.

இப் பேச்சுக்குப் பின்னர்தான் கருத்துப்போர் மூள்கிறது திராவிடர் கழகச் சார்பில் கலைஞர் மேல் கொதிப்புரைகள் வார இறைக்கப்படுகின்றன. இரு தரப்பினும் ஒருவர்மேல் ஒருவர் பழி சுமத்திப் பேசிக் கொள்கின்றனர். வீரமணியும் கலைஞரும் ஒருவரை ஒருவர் குத்தியும் தாக்கியும் பேசுகின்றனர். அந்த உணர்வெழுச்சிப் போருக்கு வீரமணியணியுடன் பிரபஞ்சனும் சாமிதுரையும் மின்சாரமும் அவருக்குத் துணையாக நின்று கருத்துகளை கூறுகின்றனர். அவற்றை ஒவ்வொன்றாகக் கீழே காட்டுகிறோம்.

'சமூக நீதிப் பிரச்சினையை அரசியலுக்குப் பலிகடா ஆக்கினால வருங்கால சமுதாயம் உங்களை மன்னிக்கவே மன்னிக்காது'

- வீரமணி பேச்சு 'விடுதலை' 1-7-94

- இவ்வாறு கூறி, இவ்வொதுக்கீட்டுக் கொள்கை தோற்றுப் போனால் அதற்குக் கலைஞரையே பலிகடா ஆக்குகிறார், வீரமணி, வெற்றி செயலலிதாவுக்கு! தோல்வி கலைஞர்க்காம்! யார் மேல் வீரமணிக்கு அக்கறை, ஆர்வம்! யார்மேல் எரிச்சல், சினம் என்று மதிப்பீட்டுக் கொள்ளுங்கள்! செயலலிதாவின் வெற்றி கலைஞரும் உடன் போவதால்தான் நேரும் என்றால், அதற்குக் கலைஞர்க்கு எவ்வாறு கனிவாக அழைப்புக் கொடுக்க வேண்டும். முகத்தில் அடித்தாற்போல் சொற்களைப் பயன்படுத்துவது எதற்கு? அவர் போகாவிட்டால் பழிவரும் என்று அச்சுறுத்தல் தேவையா? 'இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம், வன்சொலால் என்றும் மகிழாதே' என்பது வீரமணிக்குத் தெரியாதா? மிரட்டல் பாணியிலும், சாவிக்கும் தன்மையிலுமா இணக்கம் பேசுவது? எண்ணிப் பார்க்க வேண்டும்.

இச்செயலுக்குப் பிரபஞ்சன் வேறு சாம்பிராணி (தூபம்) புகை [illegible]கிறார்.

Scanned with CamScanner

'பெரியார் இருந்திருந்தால் முதல்வருடன் பெரியார் டில்லிக்குச் செல்வார் என்பது திண்ணம்'

'இந்த அடி போதாதென்று பிரபஞ்சன் கலைஞரை மீண்டும் எவ்வாறு இழிவு படுத்துகிறார் பாருங்கள்!

'இவர்கள் தமிழர்க்காக வாழ்கிறவர்கள் அல்லர். ஆகவே-தான் தங்கள் கோரிக்கைகளைப் புறக்கணிக்கிறார்கள். இவர்கள் தமக்காக வாழ்கிறவர்கள். தங்கள் தலைகளுக்குப் பின்னால் சுற்றுகிற ஒளிவட்டங்களுக்காக மட்டுமே வாழ்கிறவர்கள். வரலாறு தமக்காக மட்டும் வாழ்கிற தலைவர்களைப் புறக்கணிக்கும் என்பதே வரலாறு.'

- பிரபஞ்சன் கடிதம் 'விடுதலை' 1-7-94

இவற்றுக்கு மேல் ஒருபடி மேலே சென்று, திராவிடர் கழகத்துணைப் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சாமிதுரை அவர்கள் கலைஞர் அவர்களைச் சாடுகிறார். இதில் கலைஞர்மேல் கற்பிக்கும் தீய நோக்கம் நன்கு புலப்படுகிறது. கீழே படியுங்கள்.

'69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு ஆபத்து வந்தவுடன் தமிழ் நாடே கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சிகள் கொண்டாட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றன.'

'எதிர்க்கட்சிகளின் நடவடிக்கை சந்தேகத்துக்குரியதாக இருக்கிறது. எப்படியும் தற்போது ஏற்பட்டுள்ள ஆபத்து நீடித்தால்-தான் இந்த அரசுக்குக் கெட்ட பெயர் உண்டாகி, மக்களுக்குக் கோபம் வந்து, அடுத்து நாம் ஆட்சிக்கு வரலாம் என்ற ஆசையினால் இப்படி ஏடாகூடமாகச் செய்கிறார்களோ என்று சந்தேகம் வராமல் இல்லை.'

- சாமிதுரை கட்டுரை 'விடுதலை' 1-7-94

பிரபஞ்சன், சாமிதுரை எழுத்துகளில் கலைஞர் மேல் கொண்ட வெறுப்புணர்வுகள் எப்படி வெளிப்படுகின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும். இரண்டு செய்திகளும் 'விடுதலை' யில்தாம் வெளியிடப் பெற்றுள்ளன.

இவற்றையடுத்து 'மின்சார'த்தின் அனல் கக்கும் கருத்துகள் படிப்படியாய் வீரமணிக்குச் சார்பாகவும் கலைஞர்க்கு எதிராகவும் 'விடுதலை'யில் தொடர்ந்து வருகின்றன. தொடர்ந்து படியுங்கள்.

'ஆத்திரம் அறிவுக்குச் சத்துரு என்பார்கள். நமது பெருமதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தஇலக்கணத்துக்கு இலக்கியமாகி விட்டார்'

- 'உண்மைக் கலைஞர் வெளி வருகிறாரா?' 'மின்சாரம்' கட்டுரை. 'விடுதலை' -2.7.94.

'கழகப் பொதுச் செயலாளரும், விடுதலை ஏடும் எடுத்துவைத்த விவாதங்களுக்குப் பதில் சொல்ல முடியாத போது, அந்தோ! பரிதாபம்! கலைஞர் மிகவும் நிலைகுலைந்து போய் விட்டார். அறிவார்ந்த விவாதங்கள் துணைக்கு வர முடியாத நிலையில் ஆத்திரம் அரவணைத்துக் கொள்கிறது. அதனுடைய வெளிப்பாடுதான் அவரின் ஆவடிப் பேச்சு.'

'சரக்கு இருந்தால் பொதுச் செயலாளர் எழுப்பியுள்ள கேள்விக்கு விடை அளித்துவிட்டு அல்லவா மற்றவற்றைப் பேச வேண்டும். —பதில் சொல்ல முடியாது. காரணம் பொதுச் செயலாளர் ஆதாரத்தோடு அல்லவா பேசுகிறார். அடிப்படையைத் தகர்க்கும் வினாவையல்லவா எழுப்புகிறார்.'

'அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும், சட்டப் பேரவையிலும், அதன்பின் தாம் கூட்டிய சமூக நீதிப் பேரணிக் கூட்டத்திலும் ஏற்றுக் கொண்ட, ஒப்புக் கொண்ட ஒரு சட்டத்தைப் பற்றி இவ்வளவு தரக்குறைவாகப் பேசுகிறார், கலைஞர் என்றால், இதற்குப் பெயர்தான் என்ன?'

- மேற்படி கட்டுரை.

இத்துடன் நிறுத்திக் கொண்டிருக்கக் கூடாதா? மின்சாரத்தின் தாக்குதல்கள் மேலும் தொடர்கின்றன.

'சபாஷ்! அறிவு நாணயமான பேச்சு! சொல்லுக்கும் செயலுக்கும் மிகப் பொருத்தமான உரை - என்று பாராட்ட வேண்டுமா? மலர்க் கிரீடம் சூட்ட வேண்டுமா? கவியரங்கம் நடத்த வேண்டுமா?'

- மேற்படி கட்டுரை.

'முக்கிய எதிர்க்கட்சிகள் இன்றி டில்லி செல்வதால் பிரதமருடன் ஜெயலலிதா மேற்கொள்ளும் பேச்சு வார்த்தை பயன்படாது' என்று 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏடு எழுதியுள்ளதை 'முரசொலி' (25.6.94) முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியாகப் போட்டு மகிழ்ச்சிக் கூத்தாடுகிறது'

'இதற்குப் பொருளென்ன? முக்கிய எதிர்க்கட்சிகள் இந்தத் தூதுக்குழுவில் சென்றிருந்தால் பேச்சு வார்த்தை வெற்றிபெற்று இருக்கும். ஆக, இந்தப் பேச்சு வார்த்தை தோல்வி அடைகிறது என்றால் அதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள், அந்தத் தூதுக்குழுவில் போக மறுத்த எதிர்க்கட்சிகள் தானே?

- 'மின்சார'த்தின் மேற்படி கட்டுரை.

எப்படி? இவ்வொதுக்கீட்டுக் கொள்கை ஒருவேளை தோல்வி அடைந்தால் அதற்குக் கலைஞரையே பழிசுமத்திப் பலிகடாவாக்க எண்ணியிருக்கிறார்கள். ஏறத்தாழ பத்தாண்டுகள் முதல்வராக இருந்த

ஓர் இனத்தலைவர் என்றெல்லாம் தகுதி பெற்ற ஒரு முதன்மையான எதிர்க்கட்சித் தலைவரைப் பத்தோடு பதினொருவராக மதித்துப் பொதுவாக அழைக்கப் பெற்ற நிலையில், கலைஞர் செயலலிதாவின் தூதுக்குழுவில் சேர்ந்து தலைமையமைச்சரைப் பார்க்கப் போக வில்லை என்றால், அதுவேறு செய்தி. அஃது அவரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு உட்பட்ட செயலாகக் கூட இருக்கலாம்; அல்லது அவரின் தன்மானத்தை ஒட்டிய செயலாகவும் இருக்கலாம். அதற்காக அவரைக் குறைசுட்டிச் சொல்லலாம். குற்றமாகக் கூட கூறலாம். ஆனால், அதற்காக அவரை இழித்தோ பழித்தோ பேசுவது அண்ணாந்து கொண்டு எச்சில் துப்புவதாகும். இது பிறரைத் தாழ்த்தி இழித்துப் பேசும் செயல்மட்டுமன்று; பொதுப் பண்புக் குறைவான செயலுமாகும். அதுவும் மக்கள் நலம் நாடும் பொதுத் தொண்டுக்கு வந்தவர்கள் பொதுப் பண்பை - மக்கட் பண்பைக் கைவிடலாகாது. அப்படிப்பட்டவர்கள் எவ்வளவு பெரிய சிறந்த அறிஞர்களாகவே இருந்தாலும் மக்களாக மதிக்கப்படமாட்டார்கள்; மரமாகவே மதிக்கப் பெறுவர்.

"நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு" — 995

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண் பில்லாதவர்" — 997

என்பார் திருவள்ளுவப் பேராசான். இக்கடைப்பிடியை அரசியல் நலம் நாடுபவர்கள் இல்லையென்றாலும், இந்நலம் நாடுகிறவர் களாகச் சொல்லிக் கொள்பவர்களாவது கடைப்பிடிக்கக் கூடாதா?

நாம் இவ்வாறு கூறுவது சிலர்க்கு வருத்தமாகக் கூட இருக்கும். ஆனால் 'விடுதலை' இதழில் வந்த, குறிப்பாக 'மின்சாரம்' எழுதிய கலைஞர் எதிர்ப்புக் கட்டுரையில், எவ்வளவு எள்ளலாகவும் இகழ்வாகவும் கிண்டலாகவும் எழுதப் பெற்றிருந்தனவற்றைப் படித்தவர்கள் மிகவும் வருந்தவேண்டியிருந்தது. அத்தகைய உரைப்பகுதிகள் சிலவற்றை மேலே பார்த்தீர்கள். இன்னும் சில கூர்மையான சுறுக்குரைகளைக் கீழ் பாருங்கள்.

'ஆளுங்கட்சியின் முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டும் என்கிற அடங்கா வெறியால் ஆட்சி எதைச் செய்தாலும் எதிர்த்துத் தான் தீர வேண்டும் என்கிற அவலமும் அவசியமும் திராவிடர் கழகத்திற்குக் கிடையாது'

- மின்சாரம் கட்டுரை - விடுதலை 4-7-94

எதிர்மறையாக் கூறும் உத்தி இது. தங்களுக்கு இல்லை என்று கூறி எதிரிக்கு, அல்லது எதிராளிக்கு உண்டு என்பது. அந்த எதிராளி அல்லது எதிரி வேறுயாரும் இல்லை; கலைஞர்தான்!

Scanned with CamScanner

அவருக்குத்தான் 'முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டும் என்கிற அடங்கா வெறியாம். அதுவும் அவர் உட்கார விரும்புவது ஆளுங்கட்சியின் முதலமைச்சரது நாற்காலியாம்! ஏன்? அந்த நாற்காலியில் உட்கார வேறுயாரும் உட்காரக் கூடாதா? அல்லது அப்படி உட்கார யாருக்கும் தகுதியில்லையா? இக்கால் ஆளுங் கட்சியின் முதலமைச்சர் நாற்காலி செயலலிதாவுக்கே சொந்த மானது அல்லது சொந்தமாக இருக்க வேண்டும் என்று 'மின்சாரம்' கருதுகிறாரா? அல்லது விரும்புகிறாரா? என்ன தவறான மதிப்பீடு இது! இஃதென்ன முடியரசின் காலமா? அது வேறுயார்க்கும் சொந்த மில்லை என்று கருதுவதற்கு? ஏன் அந்த நாற்காலியில் உட்காரு வதற்குக் கலைஞர் விரும்பக் கூடாதா? அவர் ஒன்பது ஆண்டுகள் உட்கார்ந்திருந்த நாற்காலிதானே, அது! அதில் உட்கார அவர்க்கு அடங்காத வெறியா? அதனால் மனம் கோட்டி (பேதலிப்பு) கொண்டு, ஆளுங்கட்சி எதைச் செய்தாலும் எதிர்த்துத்தான் தீர வேண்டும் என்று அவர் வெறிகொண்டு அலைவதாக, எத்துணைக் கீழாக மதிப்பீடு செய்கிறார்! இத்தனை எதிரும் புதிருமான எண்ணங்களா? எத்துணை அவலம்! இழிவு! இம்முரண்பாடான மதிப்பீடுகளை எப்படித் தீர்த்துக் கொள்வது? காலமே இதற்கு விடை சொல்ல வேண்டும்.

'மின்சாரம்' மேலும் எழுதுகிறார், அதே கட்டுரையில் "எந்தக் கட்சி ஆளுங்கட்சியாக வந்தாலும் பெரியார் ஓடி ஆதரிப்பார்' - என்று சொல்வது நமக்கு ஒன்றும் புதிதல்ல'

'ஆளுங்கட்சி பெரியார் பக்கம் வந்ததா? பெரியார் ஆளுங்கட்சிப் பக்கம் போனாரா? என்பதை நிதானமாக - அறிவைப் பயன் படுத்துகிறவர்களால் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்று. (அறிவில் லாதவர்கள் தாம் புரிந்து கொள்ள முடியாதாம். அல்லது புரிந்து கொள்ள முடியாதவர்கள் அறிவில்லாதவர்களாம்! நம் அனைவருடைய அறிவையெல்லாம் எடை போடுகிறார் மின்சாரம்! இது மிகையான உணர்வில்லையா?)

'பச்சைத் தமிழர் காமராசரின் சாதனையைப் பிற்காலத்தில் தி.மு.க.வினர் புகழ்ந்தனர். ஆனால் தந்தை பெரியார் அவர்கள் காமராசரின் சாதனைகளை அந்தக் கட்டத்திலேயே பாராட்டிய போது என்னென்ன எல்லாம் பேசினார்கள்; எப்படி எப்படியெல்லாம் விமரிசித்தார்கள் என்பதை நாடு அறியும்'

'எங்களைத் திட்டுவதாகப் பொருள் அல்ல. தந்தை பெரியாரை. தந்தை பெரியார் சொல்லிக் கொடுத்த அணுகு முறையைக் கொச்சைப் படுத்துவதாகத்தான் பொருள்'.

- எப்படியிருக்கிறது, மின்சாரத்தின் கருத்து! பச்சைத் தமிழர் காமராசும் பார்ப்பன செயலலிதாவையும் ஒன்றாகக் கருதும்

திராவிடர் கழகத்தின் அணுகு முறையே தவறன்றோ? பார்ப்பனியப் பசப்புக் கருத்துகளும் காமராசரின் உண்மையான செயற்பாடுகளும் ஒன்றா? அவ்வாறானால் பார்ப்பனியம், தமிழரியம் என்ற பேசுவதே முரண்பாடு அன்றோ? செயலலிதா எப்போது தமிழராக மாறினார். 69 விழுக்காடு இடவொதுக்கீட்டு நடைமுறையே அவரைத் தமிழின நலம் கருதுவதாகப் பொருள்படுத்திக் கொள்ள முடியுமா?

மேலும், எதற்கெடுத்தாலும் 'பெரியார் சொன்னார், அதைப் போல் நாங்களும் சொல்கிறோம்' என்பதும், 'பெரியார் செய்தார். அவரைப்போல் நாங்களும் செய்கிறோம்' 'பெரியார் ஆதரித்தார் அதனால் நாங்களும் ஆதரிக்கிறோம்' - என்று நொண்டிச் சாக்குக் கூறி, இவர்களின் தவறான, காலொடிந்த அணுகு முறைக்குச் சப்பைக் கட்டு கட்டுகிறதே, திராவிடர் கழகம், பெரியார் பெயரைச் சொல்லிவிட்டால் இவர்களின் தவறான, இரண்டகமான, மானங்கெட்ட, தன்மானம் இழந்த, அடிமைத்தனமான சொற்கள், செயல்கள் பாராட்டுகள் அனைத்தும் சரியாகி விடுமா?

எதைச் சொல்கிறோம், எதைச் செய்கிறோம், யாரை ஆதரிக்கிறோம், யாரை பாராட்டுகிறோம் - என்பவற்றிலெல்லாம் தந்தைபெரியார் அணுகுமுறை வேறு, திரு.வீரமணியின் அணுகுமுறை என்பது வேறல்லவா? பெரியார் தம் வாழ்நாளில் கட்சி வேறு பாட்டைத்தான் பார்க்காமல், தமிழின மேம்பாட்டைக் கருதினாரே தவிர, இனவேறு பாட்டைப் பார்க்காமல் ஒரே ஒரு பார்ப்பனரை எதற்காகவும் ஆதரித்ததாகவோ பாராட்டினதாகவோ வரலாறு காட்ட முடியுமா?

தமிழினத்தவர்கள் நம்மை ஆதரித்தாலும், பாராட்டினாலும் அல்லது நாம் தமிழினத்தவர்களை ஆதரித்தாலும் பாராட்டினாலும் அது அதற்கெல்லாம் வேறு வேறு அடிப்படையிருக்கும்; அணுகுமுறை இருக்கும், தந்தை பெரியாரிடத்தில். அதுதான் அவரின் தனித் தன்மையான கொள்கை, கோட்பாடு, (இலட்சிய) நோக்கு.

ஆனால், அதேபோல், பார்ப்பனர்கள் நம்மை ஆதரித்தாலும், பாராட்டினாலும், அல்லது நாம் பார்ப்பனர்களை ஆதரித்தாலும், பாராட்டினாலும் அதற்கெல்லாம் ஒரே அடிப்படைதான் இருக்கும், நோக்கம் இருக்கும் - என்றெல்லாம் அகராதி எழுதி - இனங்காட்டிப் பேசியவர், நடந்தவர் தந்தை பெரியார். இதில் கட்சியையெல்லாம் முகாமையாகக் கருதியவரல்லர், அவர். ஆனால் இனத்தையே முகாமையாகப் பார்ப்பார், பெரியார்.

இதற்கு, இராசாசிப் பார்ப்பனரிடமும். நேரு பார்ப்பனரிடமும், தேசாய் பார்ப்பனரிடமும், காமராசர் பச்சைத் தமிழரிடமும், பக்தவச்சலத் தமிழரிடமும் அவர் காட்டிய அணுகு முறைகளே அவர்

வரலாற்றில் அழியாத சான்றுகளாக - பின்பற்றத் தகுந்த எடுத்துக் காட்டுகளாக இருக்கும்.

இனி, இவைபற்றியெல்லாம் மானமிகு வீரமணிக்கு, அவர் அதே காலத்தில், அவருடனேயே நெருங்கி இருந்து தொண்டு செய்ததால் நம்மைவிட அதிகமாகவே தெரியும். ஆனால், செயலலிதா நிலையில் மட்டும் திரு. வீரமணி அவர்கள் பெரியாரின் இனக் கண்ணாடியில் பார்க்காமல், தமக்கென்று தனிக்கண்ணாடி ஒன்றைப் போட்டுக் கொண்டு, செயலலிதாவை ஆதரிப்பதில் - கலைஞர் சொற்களில் சொல்வதானால், முட்டுக் கொடுப்பதில் - செயலலிதாவைப் பார்க்கும் நன்றி கலந்த கனிவான பார்வைவேறு; கலைஞரைப் பார்க்கும் நன்றிமறந்த முனிவான - வெறுப்பான - பொறாமையான பார்வை வேறு.

கலைஞர், இந்த வகையில் என்ன தவறு செய்துள்ளதாக நாம் கருதினாலும், அல்லது வீரமணி மதிப்பிட்டாலும், பார்ப்பனியத்தால் நேர்ந்த இனச்சறுக்கல்! அது யானைச் சறுக்கல்!

ஆனால், செயலலிதா இந்த வகையில் என்ன சரியானவற்றைச் செய்துள்ளதாக நாம் இல்லை, வீரமணி மதிப்பீட்டாலும் அது அவர் இனத்தூக்கல்! ஒன்றைக் கொடுத்து இரண்டு முதல் நூறைப் பெறுவது! அதுதான் ஆரியத்தின் சாணக்கிய அணுகுமுறை! தமிழினத்தைக் கவர்ந்திழுத்துத் தமிழனாலேயே தமிழனைச் சாகடிக்கும் - கெண்டையைப் போட்டு வராலைப்பிடிக்கும் - தூண்டிலிரைத் தந்திரம்! இதைப் பெரியார் உணர்ந்த அளவுக்கு அன்புக்குரிய வீரமணி உணரவில்லையே என்பதுதான் நம் வருத்தம்.

அடுத்து, 'மின்சாரம்' அதே (விடுதலை 4-7-94) கட்டுரையில் எழுதுவது:

'எங்களைக் குற்றம் சொல்வதற்கு முன் தந்தை பெரியார் என்கிற தத்துவ உரைகல்லில் வைத்து, ஒரு முறைக்கு இருமுறை நன்கு உராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள். அவசரப் படாதீர்கள்! ஆத்திரப்பட்டுக் குப்புற விழாதீர்கள்'

'இலட்சியத்தில் நம்பிக்கை உள்ளவர்களின் அணுகு முறை இப்படித்தான் இருக்கும்'

'இப்படிச் செய்வதால் கொள்கையைப் பாதுகாப்பதை விட ஆட்சியை இக்கட்டிலிருந்து பாதுகாப்பது - முட்டுக் கொடுப்பது என்கிற புதிய தத்துவத்தைப் புகுத்துகிறார்கள் நாற்காலிப் பிரியர்கள்!'

அதே கட்டுரையில் இன்னோர் இடத்தில், கலைஞர்க்கு 'மின்சாரம்' கொடுத்த பட்டம் 'நாற்காலியே சரணம் நாயகர்' என்பது.

Scanned with CamScanner

கலைஞரின் பொதுநிலை விருப்பு வெறுப்பு நிலைகளுக்குப் பட்டியல் போட்டுக் காட்டுகிறார். மின்சாரம். இவற்றைப் படித்த பொழுது நம் நினைவுக்கு வந்த திருக்குறள்கள் இவை:

"பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்(து)
ஈண்டிய கேள்வி யவர்." – 417

"நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது." – 419

'மின்சார'த்தின் குற்றச் சாட்டுகளிலும் குமைச்சல்களிலும் இனநிலையின் மதிப்பீட்டைக் காண முடியவில்லையே. 'சமூக நீதி சமூக நீதி' என்று பேசுபவர்கள் என்ன ஐரோப்பிய சமூகத்தை, ஆத்திரேலிய சமூகத்தை அல்லது வடநாட்டுப் பஞ்சாபியர், குசராத்தியர், வங்காளியர் சமூகத்தையா எண்ணிப் பேசுகிறார்கள்? தமிழ்ச் 'சமூகத்தை' தானே! அதன் தலைவர் ஒருவரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைப் பட்டியலிட்டுக் காட்டிப் பொதுப்பண்பு அவருக்கு இல்லையென்று முடிவுகட்டும் 'மின்சார'த்திற்கு, அவர் உயர்த்திக் கூறும் தி.க. தலைவரின் - பொதுச் செயலாளரின் - தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைப் பிறர் பட்டியலிட்டுக் காட்ட எவ்வளவு நேரம் ஆகும்.

இந்தக் குப்பை ஆய்வு, பிண ஆராய்ச்சி ஆகியவையெல்லாம் இந்தச் சூழலில் தேவையா? இவையெல்லாம் ஒதுக்கீட்டுச் சிக்கலைத் தெருச்சண்டை, குழாயடிச்சண்டை ஆக்கிவிடவில்லையா?

செயலலிதாவுக்கு, 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்று கொடுத்த பட்டத்தை ஞாயப்படுத்த, கலைஞர் மேல் பழஞ்சேற்றை வாரி இறைப்பதுதான் தமிழின ஒற்றுமைக்குப் பாடுபடும் முயற்சியா? அவரின் பின் உள்ள கோடிக்கணக்கான தமிழர்களை தி.க. உணரவில்லையா? அவர்கள் எல்லாம் தமிழர்கள் இல்லையா? கலைஞர் தனிப்பட்ட ஒருவரா? பங்காளிச் சண்டையை வளர்த்துப் பகையாளியுடன் உறவு கொண்டாட முயல்வதுதான் தமிழினத்தை ஒன்றுபடுத்த, நலம் பெறச் செய்ய முனையும் செயலா? இதில் பெரியாரின் பண்புடன் பிறரை ஒப்பிட்டுப் பார்த்துப் பொதுநிலையை மதிப்பிடுவது தவறான பார்வை ஆகாதா? பெரியார் எடைக் கோலில் (தராசில்) வீரமணியை மதிப்பிட்டால் என்ன ஆகும் என்று எண்ணிப் பார்க்க வேண்டாவா?

பெரியார் கருப்புச் சட்டை போட்டார் என்றால், கருப்புச் சட்டை போட்டவரெல்லாம் பெரியாராக இருக்கவில்லையே என்று வருந்துவதா? அவ்வாறு இல்லையென்றால், தெருவில் இறங்கி வம்புக்கு இழுப்பதா? இது முறையா? இது சரியா?

Scanned with CamScanner

தமிழினத்திற்காகப் பாடுபடும் ஒவ்வொருவரும் தங்களுக் குற்ற அணிசேர்த்துக் கொண்டும், சேற்றையும் சாணியையும், கற்களையும் எடுத்துக் கொண்டும், ஒருவர் மேல் ஒருவர் வீசிக்கொண்டும், இழிவாக வாய்க்கு வந்ததைப் பேசிக் கொண்டும் போராடுவதென்பது பாராட்டக் கூடிய செயலா? எண்ணிப் பார்க்க வேண்டும்.

எல்லாரும் பொதுநிலையில் வந்து பொதுத்தொண்டு செய்தாலும் ஒவ்வொருவரின் தனித்தன்மைகள், குணநலன்கள் முதலியவற்றில் வேறுபாடு இருக்காதா? அத் தனித்தன்மைகள்தாம் - அக் குணநலன்கள்தாம் அவரவர்கள் என்று குமுகாய மனவியல் கூட 'விடுதலை'க்குத் தெரியாதா? ஒவ்வொருவரும், இலாவணிபாடி எதிரியை மடக்குவதற்கு 'எரிந்த கட்சி எரியாத கட்சிப் போராட்டமா இது? எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வொருவரும் அவரவர் கடமைகளைச் செய்து கொண்டு போகும்பொழுது, 'உனக்காச்சு எனக்காச்சு, 'ஒருகை பார்த்துவிடலாம், என்று வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு போரிடத் தொடங்கினால், நம் பொது எதிரிகள் என்ன செய்வார்கள் என்று தெரியாதா?

இனி, 'மின்சாரம்' எழுதிய வேறு சில கருத்துகளையும் அன்பர்கள் கவனிக்க வேண்டும்.

'பண்பார்ந்த சொற்களைச் சலித்து எடுத்து மிகவும் கண்ணியம் வாய்ந்த முறையில் அர்ச்சனை செய்திருக்கிறார், அண்ணாவின் இதயத்தை இரவல் வாங்கி வந்திருக்கின்ற கலைஞர் பிரான்'

- 'மின்சாரம்' அதே கட்டுரை.

இதுவும் ஓர் எதிர்மறைக் கருத்து வெளிப்பாடு. கிண்டலும் பகடியுமாய்ச் சொற்கள் வெளிப்பட்டிருக்கின்றன. இது 'துக்ளக்' பாணி நடை. பார்ப்பனியப் பார்வை, கலைஞர் மேல் விழுந்திருக்கிறது. அவருடைய சொற்களை அவர் மேலேயே திருப்பி யெடுத்து வீசியிருக்கிறார், மின்சாரம்! ஒருவரைத் தாழ்த்துவதற்கு எதிரிகள் கையாளும் உத்தி, இது!

இனி, கலைஞர் இவர்கள் மேல் கூறிய கருத்து மதிப்பீடு ஒன்று 'முரசொலி'யில் வருகிறது. அதில், கலைஞர் இவர்கள் இவர் மேல் சாற்றிய குற்றச்சாட்டைத் திறனாய்வு செய்கிறார் கிண்டலாக இப்படி:

'அறிவு, நாணயக்கேடு என்று எழுதியது மாத்திரம் அல்ல. 'இது பெரியார் சொன்ன வார்த்தைதான். அதைத்தான் நான் சொல்லு கிறேன்' என்று அதில் எழுதி இருக்கிறார் (வீரமணி). அது பெரியார் பயன்படுத்திய வார்த்தையாம். பெரியார் எதற்கோ எந்தக் காலத் திலோ, யாருக்கோ பயன்படுத்திய அந்த வார்த்தையை இவர்

பயன்படுத்துவாராம். எல்லாரும் பெரியராகிவிட முடியுமா?

- கலைஞர், 1-7-94 'முரசொலி' யில்.

இதற்கு விடையாக 'விடுதலை' யில் மின்சாரம் எழுதுகிறார்.

'பெரியார் சொல்லை 'முரசொலி' பயன்படுத்தலாமாம். அதையே கழகப் பொதுச் செயலாளரோ 'விடுதலையோ' பயன்படுத்தினால் 'ஆகா, யாரைப் பார்த்து அப்படிச் சொன்னாய்' என்று ஆர்ப்பரிக்கிறார், கலைஞர்' என்றும்,

"பெரியார் சொன்ன வார்த்தை என்று சொல்லி, 'முரசொலி' யில் எழுதி இருக்கிறீர்களே, 'நீங்கள் எல்லாம் பெரியாரா? பெரியார் சொன்ன வார்த்தையை நீங்கள் பயன்படுத்துவதால், நீங்கள் எல்லாம் பெரியார் ஆகிவிட முடியுமா?!" என்று கேட்க எங்களுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?

- என்று கலைஞரை மடக்கிக் கேட்கிறார், மின்சாரம். இது தேவைதானா? 'பெரியார்' யார் - என்ற சிக்கலா, இப்பொழுது? அந்தச் சிக்கலில் - போராட்டத்தில் - 'நான்', 'நீ' என்று அடித்துக் கொள்ள?

கலைஞரைப் பார்த்து வளர்ந்தவராகத்தான், அவர் பேச்சுப் பாணியைக் கேட்டுப் பழகியவராகத்தான், இருக்க வேண்டும், மின்சாரம். அத்துடன் அவர் தமிழையும் தருக்க முறைகளையும், எதிரியைத் திருப்பி அடிக்கும் சொற்போர் உத்திகளையும் படித்துத் தம் எழுத்தாற்றலையும் பேச்சாற்றலையும் வளர்த்தெடுத்துக் கொண்டவராகத்தான் அவர் இருக்கவும் முடியும். ஏன், இன்றைக்குத் தமிழ் நாட்டில் அரசியல் மேடையேறிப் பேசும் அனைத்துக் கட்சிகளிலும் உள்ள பெரும்பான்மை இளைஞர், முதுவிளைஞர் படையினர்க்கே கூட கலைஞரின் பேச்சாற்றலும் எழுத்தாற்றலுமேதாம் வழிகாட்டுதலாக இருந்திருக்க முடியும். இது மிகையில்லை. இன்னும் கொஞ்சம் வெளிப்படையாகச் சொல்வதானால் மதிப்பிற்குரிய வீரமணி அவர்களுக்குக் கூட கலைஞரின் கருத்துத் தாக்கங்கள் உண்டு எனலாம். அப்படிப்பட்ட கலைஞரை, அவர் சொற்களை வாங்கி அவர் மேலேயே எறிவது, அவரின் நெஞ்சில் குத்துவதாகும்! எதிரி இனத்தவர்களின் முன்னால், இவ்வாறு ஒரு தமிழினத் தலைவரைத் தாக்குவது, கழகக் காலத்தில் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் நடந்த போரும், அவர்களை அமைவு படுத்த வேண்டி, கோவூர்கிழார் என்னும் புலவர் பெருமான்,

'ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே'

- புறம் :45

- என்று கூறிய வாய்மை மொழிகளும் நினைவுக்கு வருகின்றன. எண்ணிப் பார்க்கிறோம்.

Scanned with CamScanner

கலைஞர் இன்று நேற்று பொதுத் தொண்டுக்கு - அரசியலுக்கு வந்தவரல்லர். ஏறத்தாழ ஒன்பதாண்டுக் காலம் அமைச்சராக, முதலமைச்சராக - இருந்து நாட்டை ஆட்சி செய்தவரில்லையா? எத்தனைச் சிக்கல்களை அவர் பார்த்திருப்பார்? அல்லது தீர்த்திருப்பார், அவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய மதிப்பைக் கொடுக்க வேண்டாமா? இக் கேள்வியைக் கேட்கும் 'மின்சாரம்' கலைஞரைவிட அகவையில் - பொதுத் தொண்டில் - அரசியலில் முதிர்ச்சி யுடையவரா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டாமா?

தங்களுக்குச் சலுகை காட்டும் அல்லது காட்டுவார் என்று நம்பிச் செயலலிதாவை ஆதரிக்கும் மனமயக்கத்தில், நேற்றுவரை நாம் தூக்கிப் பிடித்து - உலகத் தமிழர்களுக்கே தமிழினத் தலைவராக அறிமுகப்படுத்திய ஒருவரை, இன்றைய நிலைக்குத் தக்கபடி தாழ்த்திப் பேசுவதா? கீழே தள்ளுவதா?

அப்படிக் கலைஞர் என்ன செயலலிதாவை விடத் தாழ்ந்து - போய்விட்டார்? கலைஞரைப் பார்க்கையில், அவர் இந்த இனத்திற்குச் செய்த தொண்டைக் கருதுகையில், அவரின் அரசியல் அறிவை மதிப்பிடுகையில், அவரின் உழைப்பை, மன உரத்தை, அரசியலில், அவர் பெற்ற விழுப்புண்களை மதிப்பிடுகையில், செயலலிதாவின் மேற்சொன்ன தன்மைகள் அவர் பெருமைகளுக்கு உறைபோடக் காணுமா? எண்ணிப் பார்க்க வேண்டும்; நன்றியுடன் நினைத்துப் பார்க்கவேண்டும்.

அவரின் அனைத்துத் தகுதி நிலைகளையும் நோக்கின், கலைஞர் அரைப்பெரியார்; முக்கால் அண்ணா! முழுமையான இனப் போராட்ட வீரர்! அவர் அரசியல் போர்க்களத்தில் பற்பல தோல்வி களை - அவலங்களை - அவமானங்களை - தலைக்குனிவுகளை - இழிவுகளை - பழிகளைச் சந்தித்திருக்கலாம். ஆனால், அவர் பெற்ற வெற்றிகள் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத் தக்கவை. அதனால் அவருக்குற்ற தோல்விகளும் இழிவுகளும் கூட அவ்வெற்றி வரிகளில் மறைந்து போகும்; அவையே அவரின் வலிவை மதிப்பிடத் துணையாகவும் நிற்கும்! இந்த வகையில் செயலலிதாவிற்குற்ற மதிப்பீடு என்ன?

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து அவரை மதிப்பிட வேண்டாமா? மதிக்க வேண்டாமா? அவர் பேசினார், ஏசினார் என்பதற்காக அதே உணர்வெழுச்சிகளில் நாமும் அவரைத் திருப்பித் தாக்கவேண்டுமா? இது சரியா? முறையா, இதுவரை அவரால் ஒரு சிறு தூசு அளவும் நன்மை பெறாத, நலத்துக்கு ஏங்கியிராத ஓர் உண்மைத் தொண்டுள்ளம் கேட்கிறது. விடை தர முடியுமா? வீரமணி அவர்களும் அவரைச் சார்ந்த 'மின்சார'ங்களும், சிந்தித்து விடை சொல்லட்டும்.

அண்மையில் (7-7-94) 'விடுதலை' ஓர் ஆசிரியவுரை எழுதியுள்ளது. அதில், 'செயலலிதாவை 69 விழுக்காடு இட வொதுக்கீட்டுக்காக மட்டுந்தான் திராவிடர் கழகம் ஆதரிக்கிறது. பார்ப்பன எதிர்ப்பை அதனால் அது கைவிட்டு விட வில்லை' என்று கூறப்பெற்றுள்ளது.

'சமூக நீதி தத்துவம்' என்பதே பார்ப்பன எதிர்ப்புத் தத்துவம் தான். அனைத்துத் துறைகளிலும் பார்ப்பனர்களே செலுத்தி வந்த ஆதிக்கத்தைத் தகர்ப்பதே சமூக நீதியின் லட்சியம். சமூகநீதி அமுலான காரணத்தால்தான் பார்ப்பனர்கள் ஏகபோகம் தகர்ந்து - ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வி, உத்தியோக வாய்ப்பைப் பெற முடிந்தது. எனவே, 69 சதவிகித இட ஒதுக்கீட்டை நிலை நிறுத்துவதில் தான் உண்மையான பார்ப்பன எதிர்ப்பு அடங்கி இருக்கிறதே தவிர, அதைத் கொண்டுவரக் கூடியவர் - செயல்படுத்தக் கூடியவர் யார் என்பதில் அல்ல.'

'முதலமைச்சர் செயலலிதா ஒரு பார்ப்பனர் என்று கூறி - பார்ப்பன எதிர்ப்புத் தத்துவத்தையே பலவீனப்படுத்துவது பார்பபன எதிர்ப்பு ஆகாது. அது பார்ப்பனர் சார்புப் போக்குதான்.'

'முதலமைச்சரை எதிர்ப்பதற்காகவோ அல்லது ஆட்சியைப் பிடிப்பதற்காகவோ, பார்ப்பன எதிர்ப்பு பேசுவதும் - பார்ப்பன எதிர்ப்புக் கோட்பாட்டைப் பலவீனப் படுத்துவதும் -அரசியல் சந்தர்ப்பவாதமே ஆகும்.'

'விடுதலை', 7-7-94

-69 விழுக்காடு இடவொதுக்கீடு நிலைப்படுத்தப்பட்டு விட்டால், பார்ப்பனியத்தாக்கம் ஒழிந்து விடுமா? இஃதென்ன முதிர்ச்சியற்ற - குறிக்கோளை முனைமழுக்குகின்ற கருத்து (வாதம்)! இதன் எளிமையும், நுனிப்புல் நோக்கும் ஏன் திராவிடர் கழகத்துக்குப் புலப்படவில்லை. 69 விழுக்காட்டுக்கொள்கை பார்ப்பனியத்தை அழித்து விடும், அல்லது செயலற்றுப் போகச் செய்து விடும் என்றால், பார்ப்பன செயலலிதா அதைக் கடைப்பிடிக்கப் போராடுவது ஏன்? அவருக்கு ஒன்றுமே தெரியாதா? நூறாண்டுகளுக்குப் பின்னர் பார்ப்பனர்க்குத் தாக்கம் வரும் என்ற மதிப்பிடுகின்ற கருத்து ஒன்று இன்று முளைவிடுகிறது என்றால், அதை முளையிலேயே கிள்ளி எறிகிற மூளை உள்ள இனந்தான் பார்ப்பன இனம்! அந்தத் தொலைநோக்குப் பார்வை இல்லாதவருமில்லை, இழந்தவருமில்லை, செல்வி செயலலிதா? வேறெந்தப் பார்ப்பனரையும் விட காலக்கூர்மையும் இடக் கூர்மையும் கருத்துக் கூர்மையும் உடையவர் அவர். எனவே, இதுவரை வரலாற்றில் வேறெந்தப் பார்ப்பனரும் நினைத்துக் கூடப் பார்க்காத வேதாகமக் கல்லூரி தொடங்குவதையும், தமிழ் மொழிக்கு இதுவரை ஏற்றந்தராத அமுங்கல் நிலையையும் அவர் கடைப்பிடிக்கவே மாட்டார்.

அதே போல், இந்த 69 விழுக்காட்டு நடைமுறை, பார்ப்பனர்க்குப் படிப்படியாக வேனும் அழிவை உண்டாக்கும் என்றால், அவர் அதை அத்தனை முகாமை கொடுப்பதுபோல் செயல்பட்டிருக்கவும் மாட்டார். அத்துணைக் கெட்டியான, உறுதியான, அழுத்தமான பார்ப்பனப் பெண் அவர். திராவிடர் கழகம் கருதுவது போல் அவர் ஒன்றும் அவ்வளவு வெளிப்படையானவர் அல்லர். அவர் இராசாசியை விட், நேருவை விட, ஏன் இந்திராவை, இராசீவை விடவும் பார்ப்பனியச் செயற்பாடுகளை எண்ணிச் செய்யும் பெண் சாணக்கியர் என்பதைத் திராவிடர் கழகமும் பிறரும் மறந்துவிட வேண்டாம்; புறக்கணித்து விடவும் வேண்டாம். எனவே 69 விழுக்காட்டு ஒதுக்கீட்டுக் கொள்கையால் பார்ப்பனீயம் ஒழிந்துவிடும் என்பது கதிரவ வெளிச்சக் கடுமையைப் போக்கக் குடைபிடித்துக் கொண்டால் போதும் என்கிற மேலோட்டமான அளவை மதிப்பீடே ஆகும்.

பார்ப்பனீயத்தின் நச்சு ஊடுருவல் எங்கே! 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டுச் சலுகை எங்கே! தமிழினத்தின் தமிழியலின் அனைத்து நிலைகளிலும் புகுந்து, ஊடுருவி, இரண்டறக் கலந்து நிற்கும் பார்ப்பனியக் கொடுமையை இக்கல்வி, வேலை வாய்ப்புச் சலுகைகளால் மட்டும் தீர்த்துவிட முடியும் என்றும் கருதும் அறியாமையை என்னென்பது? அதுவும் இப்பார்ப்பனீயத் தாக்கத் தகர்ப்பு இப் பார்ப்பன செயலலிதாவாலேயே தீர்ந்து விடும் என்பது என்ன மயக்கம்! இவ்வாறு இருளும் மருளும் சேர்ந்த கருத்தே பார்ப்பனியச் சார்பானதுதான் என்பதை நம் அன்பர்கள் ஏன் விளங்கிக் கொள்ளவில்லை? இக் கருத்து வேறுபாடுகளில் நாம் தருக்க எதிர் தருக்கம் (வாதப் பிரிதிவாதம்) செய்து கொண்டும், சண்டையிட்டுக் கொண்டும், ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டும் கிடப்பதும், இருந்த இடத்திலேயே நின்று கொண்டு இருப்பதுமே பார்ப்பனீயந்தான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். பார்ப்பனீயம் என்பது ஒரு மெய்ம்மம் (தத்துவம்) ஆகக் கூட இல்லை. அது செயல் பாடும் கூட. செயல்பாட்டில் கவனமும் கருத்தும் செலுத்தாமல், வெறும் 'தத்துவ'த்தில் மட்டும் கருத்துச் செலுத்துவதால் என்ன பயன்? இந்த வகையில் 69 விழுக்காடு என்பது பார்ப்பனீய எதிர்ப்பு மெய்ம்மத்தில் (தத்துவத்தில்) ஒரு கோணமே! அதற்கு இன்னும் வேறு வேறு கோணங்களும் உண்டு.

இங்கு, 69 விழுக்காடு ஒரு பார்ப்பனீய எதிர்ப்புத் தத்துவம் என்பதை ஒருவாறு ஏற்றுக் கொண்டால், செயலலிதா முதலமைச்சர் பதவி அதிகாரத்தை வைத்துக் கொண்டு, அதன் முழு செயலுரு வமாக, - அஃதாவது பார்ப்பனீயச் செயல்வடிவமாகவே இருந்து இயங்குகிறாரே, அவற்றையெல்லாம் நம் திராவிடர் கழகம் அப்போதைக்கப்போது அருகிருந்து கவனித்துக் கொண்டு,

Scanned with CamScanner

மேற்பார்வை செய்து கொண்டு - தொடர்ந்து மணியம் பார்த்துக் கொண்டு இருக்குமா? இதை மற்றவர்களும் நம்ப வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பது எத்துணை அறியாமை! ஒன்று மட்டும் அழுத்தமான உண்மை என்று எழுதிவைத்துக் கொள்ளுங்கள். இவ்வெழுத்துக்கும் அது வெளிப்படுத்தும் கருத்துக்கும் வலிமை இருக்குமானால், எதிர்காலமும் இதை உணர்ந்து கொள்ளட்டும். 69 விழுக்காட்டு ஒதுக்கீட்டுக் கொள்கை செயலலிதா வழி செயற்படுத்தப்படக் கூடாது; கலைஞர் வழியோ அல்லது வீரமணியின் தனிப்பட்ட முயற்சிகளின் வழியேதான் செயற்படுத்தப்பட வேண்டும். செயலலிதா வழி அது. நிலைப்படுத்தப் பெற்றால், அவர் சார்ந்த பார்ப்பனியமும் இந்தக் கோட்பாட்டின் வழி என்றென்றும் நிலைப்படுத்தப் பெற்றே இருக்கும் என்பது உறுதி; உறுதி; கல்போலும் காலம்போலும் உறுதி, என்க.

சுருக்கமாக இதைச் சொல்வதானால், பார்ப்பனராக இருந்து கொண்டு, பார்ப்பனியச் சார்பாக - பார்ப்பனியத்தன்மையுடன் செயலலிதா இயங்கி வருகிறார் என்றால், வீரமணி தமிழராக இருந்து கொண்டு பார்ப்பனியத் தன்மையுடன் (தமக்கே அனைத்தும் தெரியும், தாமே முற்றுமறிந்தவர், எனவே தாம் சொல்வதே சரி என்பது போலவும், 'யார் பேச்சையும் நான் கேட்க மாட்டேன் - ஆனால் என்பேச்சை எல்லாரும் கேட்க வேண்டும்' என்பது போலவுமே பேசுகிறார் திரு. வீரமணி. 'எனக்குத் தெரிந்த ஞாயம் யாருக்கும் தெரியாது; அதனால் என் ஞாயத்தையே கலைஞர் உட்பட எல்லாரும் ஞாயம் என்று ஒப்புக் கொள்ள வேண்டும்.' என்பது அவர் கருத்தாக இருக்கலாம். இனி இவருடன், கலைஞர்க்கு, சாமிதுரை, மின்சாரம், பிரபஞ்சன் அனைவருமே ஞாயம் கற்பிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள். (14-7-94)

இவற்றுக்கிடையில் 'குமுதம்' இதழ்க்கு ஒரு நேருரை தந்துள்ளார். திரு. வீரமணி. அதில் ஒரு பகுதியை அனைவரும் கவனிக்க வேண்டும். அதில், கலைஞர்க்குச் சார்பாகப் பேசுபவர்களை 'அற்பர்கள்' என்று வாய் கூசாது வீரமணி கூறுகிறார். அப்பகுதி கீழே தரப்பெறுகிறது.

'செய்தியாளர் : பெரியார் அறக்கட்டளைக்காக முதல்வர் உங்களுக்கு (வீரமணிக்கு) 5 இலக்கம் அளித்து, மற்றும் தாங்கள் பொறுப்பேற்றுள்ள கல்வி நிறுவனங்களுக்காக முதல்வரிடமிருந்து சலுகைகள் பெற்றதன் காரணமாகவே தமிழக முதல்வரைத் தாங்கள் தீவிரமாக ஆதரிப்பதாகவே ஒரு பேச்சு எழுந்துள்ளதே!

வீரமணி விடை: சலுகைகளால் எங்களை விலைக்கு வாங்க முடியாது. நாங்கள் ஆதரித்துத்தான் சலுகைகளைப் பெற்றோம்

என்னும் கடந்த கால வரலாறு இல்லை— ஆகவே, வெறும் காழ்ப்புணர்ச்சியினால் கொச்சைப்படுகிற 'அற்பர்'களுடைய பிரச்சாரம். அதில் எள் அளவும் உண்மை இல்லை.'
(மேலும் விளக்குகிறார்)

"பச்சை அரசியலான அணுகுமுறை கலைஞருடையது? அரசியல் கூட்டணி சேர்வதற்குக் கலைஞர்க்கு இது நல்ல வாய்ப்பு, ஒரு முன்னோடியான முயற்சி என்பதை அவரைச் சுற்றியுள்ள நிகழ்ச்சிகள் தெளிவுப்படுத்துகின்றன. .... அம்மையாரை (செயலலிதாவை) வீழ்த்துவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு என்று உணர்ந்த, அரசியல் கூட்டணி உருவாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

இந்த வருத்தமும் வேதனையினாலும்தான் என்னால் கலைஞரோடு உடன்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
- 'குமுதம்' வீரமணி நேருரை. 'விடுதலை' 9-7-94

அத்துடன், வீரமணியின் இன்னொரு கருத்தும் கலைஞரை அவர் எவ்வாறு கருதுகிறார் என்பதைப் புலப்படுத்தியிருக்கிறது. அது செய்யாறு இரவி திருமணம். அதில் திரு. வீரமணி இப்படிப் பேசுகிறார். ('விடுதலை' 11-7-94)

'தன்னைவிட மற்றவர்களுக்குப் புகழ் வந்து விடுமோ என்ற பொறாமைக்கு ஆளாகாத நல்ல மனிதர், இரவி' என்று கலைஞரை எதிர்மறையாக மனத்தில் நினைத்துக் கொண்டு இரவியைப் புகழ்ந்து பாராட்டுகிறார்.

இவையெல்லாம், கலைஞர், பொய்ப்பிரச்சாரம் செய்பவர் காழ்ப்புணர்ச்சி கொண்டவர், பொறாமையுள்ள கெட்ட மனிதர் என்று வீரமணி கருதுவதைப் புலப்படுத்தவில்லையா?

கலைஞர் அரசியலிலே ஊறியவர்; ஆட்சிக் கட்டிலில் ஏறியவர்; அண்ணாவிற்குப் பின் அவ்வளவு பெரிய அரசியல் கட்சியைக் கட்டிக்காத்தவர். பல சீர்குலைவுகள், புயல்களுக்குப் பின்னும் அது சிதைந்து போகாமல் காத்து வருபவர்.

அவருக்கு யாரும் அரசியல் பாடம் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. அவருக்குக் கருத்துகளை எடுத்துக் கூறினால் போதுமானது.

அவர் ஏதோ அறிவில்லாமல் இயங்கிக் கொண்டிருப்பது போலவும், நாம் ஏதோ அறிவுச் சூரியனாக விருந்து, அவருக்கு அறிவொளி பாய்ச்ச வேண்டிய தேவை அவருக்கிருப்பது போலவும் கருதிக் கொண்டு, மூட்டை மூட்டையாக நம் அறிவுச் சரக்குகளை

Scanned with CamScanner

அவிழ்த்துக் கொட்டி, நம் பெருமைகளையும் அவரின் சிறுமைகளையும் அளந்து பார்க்கும் முயற்சியில் ஈடுபட முனைய வேண்டியதில்லை. 'யானை விழுந்தால் எறும்பும் ஓர் உதை உதைக்கும்' என்பது போல், அரசியலில் அடி வீழ்ந்தும், மனம் சிதையாமல் உள்ள அவரின் வீரத்தைப் பாராட்டாமற் போனாலும் இகழ்வு படுத்திப் பேசுவது அவருக்கும் நமக்கும் இழிவன்றோ? அவருக்கிருக்கும் அரசியல் தன்மதிப்புணர்வு (அதைத் 'தன்முனைப்பு' என்று கொண்டாலும் தவறில்லை) உடனடியாக, தன்னளவில் செயல்படுமானால் அதைப் பாராட்டி வரவேற்று ஒத்துழைப்பதே நமது அணுகுமுறையாக இருக்க வேண்டும் என்றே நாம் கருதுகிறோம். இதில் பெரியாரின் அணுகு முறை இதுதான் என்று கூறிப் பெரியாரையும் இணைத்துக் கொள்ள வேண்டியதில்லை. பெரியார் காலத்து அரசியல் சூழ்நிலை என்பது வேறு; இன்றைய அரசியல் சூழ்நிலை வேறு.

இன்னொன்றையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பார்ப்பனரைப் பொறுத்த வரையில் அவர்கள் எதைச் செய்தாலும் அது தமிழர்களுக்கு எதிராகத்தான் இருக்கும் என்பதுதான் பெரியாரின் தெளிந்த நடைமுறையாக இருந்தது. அவர் அதை மாற்றிக் கொள்ளும் படியோ, அல்லது பார்ப்பனரைப் பாராட்டி வரவேற்றுப் பட்டம் தந்து புகழ்ந்துரைக்கும் படியோ, எந்த இக்கட்டான சூழ்நிலையும், அவர் காலத்தில் அவர்க்கு ஏற்பட்டதில்லை. ஏற்பட்டிருந்தாலும், பிரபஞ்சன் கற்பனையாக, நயப்பாசையாகக் குறிப்பிடுவது போல், செயலலிதாவின் தூதுக் குழுவுடன் பெரியாரும் சென்றிருப்பார் என்று குறிப்பிடுவது பெரியாரையே அவமதித்ததாகும். இல்லெனில் அவரின் தன்மதிப்புக் கொள்கையையே இழிவுப்படுத்தியதாகும். அவர் இராசாசியின் இறப்புக்குச் சென்றது அவரின் தனிப்பண்பு. அது கொள்கைக்கும் வேறானாது. செயல்லிதாவின் பின்போவது என்பது அவர் கொள்கைக்கே மாறானது. அச் சட்ட ஒப்புதல், அவர் தில்லி போனால் கைகூடும் என்றால், அவர் தனியே போய்த் தலைமையமைச்சரைப் பார்த்துக் கேட்பாரே தவிர, செயலலிதாவின் பின் செல்ல மாட்டார். அதுதான் அவரின் தன்மானம், அதனால்தான் அவர் பெரியார். சும்மா வாய்புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று நம் தன்மான நெகிழ்ச்சியைப் பெரியார்க்கு ஏற்றிச் சொல்லக்கூடாது. அது நமக்கே இழுக்கு! இதே தன்மானமும் தன் மதிப்பும் கலைஞர்க்கும் இருக்கின்றன அல்லது இருக்கும் என்பதை நாம் என் ஏற்றுக் கொள்ளக் கூடாது?

'எவரின் ஏச்சும், பேச்சும் எம்மைத் திசை திருப்பாது; திருப்பவே திருப்பாது' என்னும் உணர்வு வீரமணிக்கு இருக்குமானால்

(விடுதலை 6-7-94) கலைஞர்க்கு அது ஏன் இருக்கக்கூடாது? இருந்தால் அது மட்டும் எப்படிப் பிழையாகும்?

69 விழுக்காடு இட ஒதுக்கீட்டுத் திட்டத்தில் திரு. வீரமணி தரும் விளக்கங்கள் சரியாகவும் இருக்கலாம். கலைஞர் தரும் எதிர்ப்புகள் தவறாகவும் இருக்கலாம். அவ் வேறுபாட்டு விளக்கங்கள் ஒரு வழக்கு மன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு இடையில் நடைபெறும் தருக்கங்கள் போல் கருத்துகளை அல்லது செயற்பாடுகளை அல்லது அவற்றின் ஏற்றத் தாழ்வுகளைக் குறித்ததாகவும் இருக்கலாம். ஆனால், அக் கருத்துப் போராட்டத்தில் பண்புக் குறைவான சொற்களும் தனிப் பட்ட தாக்கங்களும் இழிவும், தரந்தாழ்ந்த பழிப்பும், மறைமுகமான கிண்டல், குத்தல் பேச்சுகளும் இடம் பெறக் கூடாது என்பதே நம் அன்புரை; வேண்டுகோள் ஆகும். 69 விழுக்காட்டு ஞாயத்தை வீரமணி எடுத்துக் கூறுகையில், முதலமைச்சர் செயலலிதாவிற்குச் சார்பாக நின்றுதான், அவரை உண்மைக்கு மாறாகப் புகழ்ந்துதான், அதேபொழுது கலைஞரை இகழ்ந்துதான், சாடித்தான், அவர் நெஞ்சில் குத்தித்தான், சொல்லவேண்டும் என்பதில்லை.

'இனிய உளவாக இன்னாத கூறல்' 'இன்சொலால் அன்றி, இருநீர் வியனுலகம், வன்சொலால் என்றும் மகிழாதே' என்னும் அறவுணர்வுகளைக் கடைப்பிடித்தால் மிகு பயனும், தமிழின ஒற்றுமையும் கூடுமன்றோ?

அப்படி என்ன செயலலிதா கோரிக்கை அல்லது முயற்சி நிறைவேறி விட்டது?. திட்டங்களை அறிவிப்பதே அல்லது பேசுவதே, பாராட்டுக்கும் புகழ்க்கும் உரியவாகி விடா. 'நீ ஆதரித்துப் பேசிச் சட்டம் போட்டுக் கொண்டு வா; நான் இங்குத் தில்லியில் பார்த்துக் கொள்கிறேன்; தள்ளி விடுகிறேன். அதனால் உனக்கொன்றும் தாழ்ச்சி வராது. மற்றபடி தமிழ்நாட்டு மக்கள் தில்லியை எதிர்த்தால், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்' என்று நரசிம்மராவும், சவானும் செயலலிதாவிடம் சொல்லக் கூடிய சாணக்கியத் தந்திரம் கொண்ட வர்களே! செயலலிதாவும் அவர்களுடைய தந்திரத்திற்கு ஒத்துழைப் பவரே! இவ்வகையில்தான் செயலலிதாவின் காவிரிக் கோரிக் கையும் கச்சத்தீவின் கோரிக்கையும் முனைமழுக்கப்பட்டன. மூளியாக்கப் பட்டன. அதன்பின் என்ன நடந்து விட்டது? 'நாங்கள் என்ன செய்வோம்? தில்லி மறுக்கிறது. நாங்கள் தில்லியை எதிர்த்துக் கொண்டுதான் உள்ளோம். அதற்குமேல் என்ன செய்ய முடியும்? போரா தொடுக்க முடியும்?! என்று வழக்கமான பின்வாங்கல் பேச்சுத்தானே நடைபெறும். ஆனால், அதற்குள் தமிழினம் பல்வேறு குழுக்களாகச் சிதறி விடும். அக்குழுக்களில் கலைஞர் ஒரு குழுவில் இருப்பார்; மற்ற குட்டித் தலைவர்களெல்லாம் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து பழையபடி கூட்டம், மாநாடு, போராட்டம், உண்ணாநோன்பு, மறியல், கடையடைப்பு (பந்த்), - என்று மீண்டும் காலத்தைக் கடத்திக்

கொண்டிருப்பர். தமிழினம் இவ்வாறு ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு படியாய்க் கீழிறங்கி, இறுதியில், இவ்விருபதாம் நூற்றாண்டிற்குள்ளேயே உட்சிதைந்து உருப்படி யில்லாமல் உருத்தெரியாமல் - ஒன்றுமில்லாமல் போய் விடும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

'நான் அடிப்பது போல் அடிக்கிறேன்; நீ அழுவது போல் அழு' என்பது போல், 'நான் அழுவதுபோல் அழுகிறேன்; நீ அடக்குவது போல் அடக்கு' என்பதும் பார்ப்பனரின் நடைமுறைத் தந்திரம்.

தமிழினத்தை ஒன்றுபடுத்துகின்ற முயற்சி ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழினத்தை வேறுபடுத்திப் பகை கொண்டு, முட்டி மோதி, அழிக்கப்படுகின்ற சூழ்ச்சிகள் மறுபுறம் நடந்து கொண்டுவருவது, மிகவும் கவலை தருவதாக உள்ளது.

தொடக்கத்தில் மேக மூட்டமாய்த் தோன்றிய 'விடுதலை' 'முரசொலி'களின், 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டுக் கருத்துப் போர், வர வர உமித்தூறலாய், பின் சாரலாய், பிறகு துளி மழையாய் வளர்ந்து, அதன்பின் பெருமழையாய் மிகுந்து, இக்கால் அடைமழையாய்,புயல் மழையாய்ச் சீறிப் பெய்து கொண்டுள்ளது. இன்னொரு வகையாகக் கூறினால், சொற்போராய்த் தொடங்கிய இவ்வொதுக்கீட்டுப் போராட்டம், கருத்துப் போராட்டமாய்ப் பெருகி வளர்ந்து, வீரமணி அணிக்கும் கலைஞர் அணிக்கும் இக்கால் அறிவுப்போராக, உணர்வுத்தாக்குதல் எய்யும் - வெற்றி தோல்வியைக் கண்டுவிடும் - தன்மானப் பெரும் போராகப் பெருகி வளர்ந்து விட்டது. இப்போர் எதிர்காலத் தமிழின முன்னேற்றத்தைத் தீர்மானிக்குமா அல்லது அதன் வீழ்ச்சிக்கு வழிவகுக்குமா என்பது தெரியவில்லை. ஏனெனில், போர் மூட்டத்தின் நெரிசலில் போர் எதற்காக மூண்டது என்னும் கொள்கைக் கரு அழிந்து போய் காழ்ப்புணர்வும், பொறாமையும், தன்மான எழுச்சியும், இழிப்பும் பழிப்பும் மிகுந்த சொற்தேடலும், அவரவர் குணநலத் தாக்குதலும் ஆகிய குருதிக் கொப்பளிப்பு மோதல்கள் பீறிடத் தொடங்கி விட்டன. இந்நிலை எங்கே போய் முடிவடையுமோ தெரியவில்லை. எனவே, அத்துடன், இதில் யார் வெற்றி பெறுவாரோ, யார் தோல்வி அடைவார்களோ அதையும் கணிக்க முடியவில்லை.இப்போரை,யார் வந்து நிறுத்துவார்களோ அதுவும் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இப்போரின் முடிவில் யார் வெற்றி பெற்றாலும், யார் தோல்வி அடைந்தாலும், அவற்றால் தாக்கம் பெறப் போவது நம் தமிழினமே!

எனவே, இறுதியாக இருதரப்பினர்க்கும் நாம் அன்பாகச் சொல்லிக் கொள்வதும், நடுநிலையான விருப்பு வெறுப்பில்லாத கருத்துரையும் இதுதான்:

'நம் அருந்தமிழ்ப் பேரினம், தாழ்த்தப்பட்ட இனம், வீழ்த்தப்பட்ட இனம், கசக்கிப் பிழியப்பட்ட இனம், ஆரியத்தால் அடி சாய்க்கப் பட்ட இனம், அவர் அடிமைகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட இனம்; இனச்சூழ்ச்சிகள் வீழ்ச்சிகள் என்னும் கடும் புயல்களில் சிக்கிச் சிதைந்து,சீரழிந்து போன இனம்; வீடணர்களால், பிரகலாதன்களால், சுக்ரீவன்களால், எட்டப்பர்களால், பக்தவச்சல, சுப்பிரமணிய, கண்ணதாச, வாழப்பாடி, திண்டிவனங்களால் - இன இரண்டகக் காட்டிக் கொடுப்பான்களால் அன்றும் இன்றும் உள்ளரிக்கப்பட்டுக் குருதி உறிஞ்சப்பட்டு,எலும்பும்தோலுமாய்,நரம்பும்நாருமாய்,தோரும் துருத்தியும் போல, வலிவிழந்து, பொலிவிழந்து, முகம் வெளுத்து, அகம் குன்றிக் கால் சூம்பிக் கைசோர்ந்து,கண் மங்கிக் காது செவிடாகி நாவரண்டு, மூச்சிரைத்து, எழுச்சியின்றிப் படுகிடையாகப் படுத்துக்கிடக்கிறது.

இதைத் தூக்கி நிறுத்த பேரறிஞர் திருவள்ளுவர் காலம் முதல் தந்தை பெரியார் காலம் வரை, பல்வேறு தலைவர்கள், பல்வேறு கோணங்களில், பல்வேறு முயற்சிகள். அறிவூட்டல்கள் செய்யப் பெற்றன. ஆனால், அந்த அளவுக்கு இவ்வினத்தின் மேல் எதிரிகளின் இரண்டகர்களின் புற, அகத்தாக்கங்கள் இருந்ததால் அவை அனைத்தும் தோற்றுப் போயின.

இன்றும் அம்முயற்சிகள் நல்லவர்கள், வல்லவர்கள், இனநலக் காவலர்கள், புரட்சிப் பாவலர்கள், அறிஞர்கள், தலைவர்கள் பலராலும் நடைபெற்று வருகின்றன என்றாலும், அவையும் சாண் ஏறி முழம் சறுக்குகின்ற கதையாகவே போய்க் கொண்டு வருகின்றன.

இந்நெகிழ்ச்சி நிலைகளை நினைந்து நினைந்துதான்,

"தென்னாட்டு நிலை நினைத்தால் வெடிக்கும் உள்ளம்!
செந்தமிழர் நிலைநினைத்தால் துடிக்கும் நெஞ்சம்!"

என்றும், தமிழனைப் பார்த்து, அவன் ஒடுங்கிய நிலை கண்டு வருந்தி,

"தமிழனே! இது கேளாய் – உன்பால்
சாற்ற நினைந்தேன் பல நாளாய்"

என்று தொடங்கி, உயிருணர்வு தோன்ற,

"மனிதரில் நீயும் ஓர் மனிதன்! மண்ணன்று!
இமைதிற; எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியால் மேதினிக் கொளி செய்!
நகைப்பை முழக்கு! நடத்து உலகத்தை
இது உன் வீடு"

Scanned with CamScanner

என்றும்,

'ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்!
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான் சேர்ப்பேன்"

என்றும், நெஞ்சம் பதறிப் பதறி பல்லாயிரம் எழுச்சிப்பாயிரம் பாடினார், பாவேந்தர்! அதன் பின்னும், உறக்கம் களைந்தும் அயர்வுக் கிறக்கத்தில் அசைந்து கிடந்த இம் மறக்குலத் தமிழனை வீறு கொண்டு எழச் செய்யவும் அணிதிரட்டவும்,

"வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையிருப்பைக் காட்ட எழுந்திடு!
குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணாக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு!
பொன்மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்று சேர்! வாழ்வை உயர்த்துக!"

என்றும்,

"— சிறுத்தையே வெளியில் வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்
சிங்க இளைஞனே! திருப்புமுகம்! திருப்பு விழி!
இங்கு உன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?"

என்றும்,

"கைவிரித்து வந்த கயவர், நம்மிடைப்
பொய்விரித்து நம் புலன்கள் மறைத்துத்
தமிழுக்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்குஎன் பார்எனில்
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற்(று) எங்கே? விழிப்புற்(று) எழுக!"

என்றும்,

"என்தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்
துலங்கிடுதல் காண்பேன் – தமிழர்
நலங்காண் பேன்நான் நானில மீதிலே"

என்றும்,

'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்! அன்னார்
உள்ளத்தால் ஒருவரேமற்(று)
உடலினால் பலராய்க் காண்பார்!
கள்ளத்தால் நெருங்கொணாதே –
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளுநாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும் நாள் எந்த நாளோ?"

என்றும், பல நூற்றுக்கணக்கான எழுச்சிப் பாடல்களைப் பாடித் தமிழர் அனைவரும் ஒன்றாய் இணைந்து, தமிழ்நாட்டு விடுதலைக்குப் பாடுபட வேண்டும் என்றும், வாழ்நாள் முழுதும் உள்ளப் பெருமூச்சு விட்டுச் சென்றார். அவர் விட்ட பெருமூச்சு கலைஞர் விட்ட பெருமூச்சினும், வீரமணி விடுகின்ற பெருமூச்சினும் மிக மிகப் பெரிது; நீண்டது! எனவே, இருவரும், தலைவரும் தளபதியுமாக இருந்து, தங்கள் இனப்பூசல்களையும், கொள்கைப் பூசல்களையும் மறந்து, ஒன்றாக இணைந்து, தமிழ்நாட்டு மறுமலர்ச்சிக்கும், வடவாரியப் பிடிப்பி னின்று இத்தமிழகத்தின் விடுதலைக்கும் பாடுபடுமாறு அவர்கள் இருவரையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். பூசல்களை வளர்த்துக் கொள்வதற்கல்ல, தந்தை பெரியாரின் கொள்கையும், கருத்துகளும் அணுகுமுறைகளும்! நாம் அனைவரும் ஒன்றிணை வதற்கே - என்றும் தமிழினத்தவர் எண்ணுவார்களாக!.

(குறிப்பு: இக்கட்டுரை 15.7.94 க்கு முன்னர் எழுதப்பெற்றது.)

"திருக்குறள் மெய்ப்பொருளுரை"

அன்பர்களுக்கொரு விளக்கம்

ஆசிரியரின் 'திருக்குறள் மெய்ப்பொருளுரை' நூல், திட்டமிட்ட வாறு சென்ற ஆண்டு (93) மார்ச்சு தொடக்கத்தில் வெளிவந்திருக்க வேண்டியது. ஆனால் அவரின் சிறைப்படுத்தத்தால் வெளிவர இயலாமற் போனது. ஆசிரியர் அதன் நீண்ட முன்னுரையை எழுதிக் கொண்டிருந்த பொழுதுதான் சிறைக்குச் செல்ல வேண்டி வந்தது.

ஏறத்தாழ 150 பக்கங்கள் கொண்ட ஆய்வு முன்னுரை இடையிடைத் தடைப்பட்டு இன்னும் முடியாமல் தொடர்கிறது.

அது விரைவில் எழுதவும், நூல் வெளிவரவுமான தொடர்ந்த முயற்சி நடைபெற்று வருகிறது. எனவே அன்பர்கள் அதன் காலத் தாழ்த்தத்திற்குப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறோம். விரைவில் அனைத்துத் தடைகளும் நீங்கி, நூல் வெளிவரும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

– நூல் வெளியீட்டுக் குழுவினர்.

Scanned with CamScanner

செய்தியை அன்பர் அருளியார் வழிக் கேட்டுத் துயருற்றேம். தம் மகனாரின் மாண்புகளை கண்டும் கேட்டும் துய்ப்புற்ற அத்தாய் நம்மை என்றும் உடன் இருந்து வழி நடத்துவார்கள்.

தம் மகனார் வழி அவர்கள் இவ்வுலகை ஒளி செய்வார்கள்.

அன்புடன், —மா,செ.தமிழ்மணி. ஆட்டுப்பாக்கம்-631051.

O : 1564: அன்பின் ஒளியே வணக்கம். என்னை மன்னிக்கவும். இறந்த அன்னையைக் காண இயலவில்லை. மறைந்த அன்னையை நான் பலமுறை கண்டு களிப்புடன் உரையாடியுள்ளேன். குழந்தை உள்ளம்; மென்மையான பேச்சு; அமைதிப் பேச்சு: அன்புப் பேச்சு! மங்கிய ஒளியில் எத்தனையோ திங்கள் அந்த அன்னை இருந்த நிலை மறந்து அன்றொரு நாள் (அவர்கள் வாழ்ந்திருந்த சேலம் வீட்டில்) குழல்விளக்கை எரியச் செய்த என்னைப் பார்த்து 'குழந்தை ஒன்று' முழு நிலவினைக்கண்டு பூரிப்புக் கொண்டதை இன்றும் என்றும் என்னால் மறக்க முடியாது. இனிமையான காட்சி! காலில் அடிபட்டுக் காலமுறிந்து மருத்துவமனையில் இருந்தபொழுது என்னிடம் நுட்பமான செய்திகளையெல்லாம் சொல்லிச் சொல்லி என்னுள் அமைதி பெறப்பெற்ற அந்த இன்பமான நாள்களின் இனிய காட்சிகளை எண்ணிப் பார்க்கிறேன். கண்ணீர்! கண்ணீர்! கண்ணீர்! மாந்த இனத்தில்—உயிரினத்தில்—இந்த மண்ணில்—உண்மை ஒன்றுண்டு பிறப்பும் உண்மை;இறப்பும் உண்மை. சிறப்பு இருப்பது—வாழ்வது—நன்மை! படிப்பறிவற்ற அந்த அன்னை—இந்த மண்ணில் பழிபிறங்காப் பண்புடைய ஒரு மகனைப் பெற்றார். நற்பேறு பெற்றார். ஆம் கல்வி அறிவில்லா அந்த அன்னை எண்ணாமல் எண்ணினார். "தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது" என்றும், ஈன்ற பொழுதினும், தான் இருந்தபொழுது—வாழ்ந்த பொழுதே "சான்றோன் தன் மகன்" என்பதைக் கேட்டு இன்புற்ற, இறும்பூதெய்திய அந்த அன்னை உடலால் இறந்த வழிதான். உள்ளத்தில்—உணர்வால்—உயிரால் நம்மிடையே என்றென்றும் வாழ்பவர்தாம். இறந்த அன்னையின் பிரிவினால் துயருறும் அருமை நெஞ்சங்களுக்கு என் கண்ணீர் அஞ்சலி, அன்பு—அருள்மணி, பெங்களூர்-21

O : 1565: அண்ணல் அவர்களுக்கு, வணக்கம்.

இனியவும் இன்னாததும் ஒப்பி ஏற்கும் சான்றாண்மை கண்டேன். அன்னையார் காலமான செய்தி அறிந்து துயருற்றேன். தாயன்பை அவர்களின் இறுதிக்காலத்தில் உடன் இருக்க இயலாமல் போனதற்கு வருந்திய சொல்லால் வெளிப்படுத்தியிருக்கின்றீர்கள். என் துணைவியார் இரங்கல் கேட்க வேண்டுமே என்றார். அவர் சார்பிலும் என் ஆறுதலைப் புலப்படுத்துகிறேன்.... காரைக்குடியில் பாவேந்தர் பிறந்தநாளில் தொடங்கப் பெற்ற 'தமிழியக்கப் பாசறை'க் கூட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். திரு.இரா.பாவாணன் பேச்சு அவர் உ.த.மு.க உணர்வுடனேயே இயங்குகிறார் என்பதைக் காட்டிற்று. அவர் தங்களின் அருந்தமிழ்த் தொண்டியக்கத்தை விரிவாகப் பேசினார். —பறம்பை அறிவன், பறம்புக்குடி.

O : 1566: பேரன்புடையீர், வணக்கம்...பெரிய அம்மா சேலத்தில் இயற்கை எய்தியது குறித்து என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை. உயர்நெறி மன்றத்திற்குள் அம்மா தங்களைப் பார்த்து அழுத காட்சியும், தாங்கள் அம்மாவின் கண்ணீரைத் துடைத்த காட்சியும் என் மனக் கண்ணில் நிழலாடுகின்றன. அன்புடன், —கண்ணன், கரடிப்பட்டி.

O. 1567: ஒண்சுடரே! வணக்கம். '**தமிழ்நிலம்**' இதழ் எண்: 167,168-மற்றும் 169 கண்டேன், அவற்றுடன் '**தென்மொழி**' சுவடி 27 ஓலை 4-கண்டேன். அதில் "திராவிடர்-தமிழர் குழப்பம் நீங்க தமிழினம் என்றே குறிப்பிடுக"—என்றும், "திராவிடர் என்றதால் தமிழர் என்பதை மறந்தோம்" என்றும், "ஆட்சியில் உள்ளவர்கள் பிறந்த நாள் பிற விழாக்கள் கொண்டாடுவதைத் தடை செய்ய வேண்டும்" என்றும், 'வெல்லாத ஆரியர் வென்ற கதை இது! வீரத் தமிழினம் வீழ்ந்த இழிவிதே!'—என்றும். இதுவரை இந்த மண்ணில்—உலகில் எந்த ஓர் அறிஞனும் எண்ணிப் பாராத-எழுதத்தெரியாத-எழுதத்துணியாத—எண்ணற்ற சான்றுகளுடன்—நெஞ்சுரத்துடன் உண்மை உலகில் உயிர் வாழ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன் எழுதியுள்ளீர்கள். எனினும் இதனை மானமுள்ள மக்கள் இனம் கண்திறந்து பார்க்கவில்லை. நகைமுகன்கள் உங்கள் மூத்தான எண்ணங்களை பகைமுகத்தான் பார்க்கின்றனர். உண்மை கலிலியோ காலத்தினின்று மதிக்கப் பெறுமல்தான் போகின்றதே என்பதை எண்ணும் பொழுது...! 'இறை' யென ஒன்றிருந்தால் அதுவும் இப்படிப் பொறுமை கொள்ளாது. தங்களின் தூய எண்ணத்தைப் பாராட்டுகின்றேன்; வாழ்த்துகிறேன்; வணங்குகிறேன். அன்பு நிறை, —**அருள்மணி**, வெங்காலூர்-21

O: 1568: தமிழர்களின் மீட்புப் பணியை ஏற்ற அன்புத் தமிழறிஞர் ஐயா அவர்களுக்கு, பணிவான வணக்கங்கள். ஐயா, '**தென்மொழி**' '**தமிழ்ச்சிட்டு**' '**தமிழ்நிலம்**' தொடர்ந்து எனக்குக் கிடைத்து வருகின்றன. மக்களின் வரிப்பணத்தைத் தன் நலனுக்கு ஆடம்பரச் செலவிட்டவர்களைப் பட்டம் கொடுத்துத் தோளில் சுமக்கும் கொடுமை—நம் அனைவரின் மேலும் சுமந்து கிடப்பதை—அறுத்தெரிய வேண்டும். தங்களின் பெரும முயற்சியால் '**தென்மொழி**' தமிழின நலனை இன்றும் உரிமையோடு ஓங்கி ஒலிக்கின்றது. அதே போல் தங்களின் இடைவிடா முயற்சியால் உருவாக்கப் பெற்ற உ.த.மு.கழகம் செயல் புரிய வேண்டும். எல்லாத் திராவிடக் கழகங்களும் பின்வாங்கிப் போய் முடங்கி விட்டன. 'திராவிடர்' என்பதற்குத் 'தமிழர்' என்பதை எந்தக் கழகமும் அதன் தலைவர்களும் ஏற்க மறுக்கின்றனர். செவிடன் காதில் சங்கு ஊதியும் பயனிருக்காதது போல் திராவிடர் பொறுப்பை ஏற்ற கழகத் தலைவர் இருந்து வருகிறார்கள். உ.த.மு.க. வளர வேண்டும். ஐயா, தங்களின் இன்றியமையாத பணியின் பயன் தமிழர்கள் அனைவர்க்கும் கிடைத்திடவும், மீண்டும் இழந்த உரிமைகளை மீட்டு, உலக அரங்கில் சிறந்து விளங்கிடவும் இறைவனை இறைஞ்சுகிறேன்.

அன்புடன், —**தா. அருட்கையன்**, வல்சாது.

O 1569: தமிழன்னையின் தலைமகனுக்கு வாழ்த்துகள். வெல்வதும் நோக்கம். உங்கள் இதழ்களைப் படித்து உணர்ச்சி வயப்பட்டு எகிறிக் குதித்தேன். இடுப்பை உடைத்துக் கொண்டேன். எப்படி இருக்க வேண்டிய தமிழ் இனம் இப்படி மடங்கிக் கிடக்கிறதே. என் செய்வது, இறைவன்தான்—இயற்கைதான் வழிகாட்ட வேண்டும். உலகத் தமிழர் ஒன்று படுவது எப்போது? இதற்கு முயற்சியெடுங்கள். —**செஞ்சிக்கண்ணனார்**, செஞ்சி.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)

Scanned with CamScanner